க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1925ஞு ஏப்ரல்மீ | இதழ் 8.

தெய்வ வழிபாடு.

"தானமுந் தவமும் யோகந் தன்மையு முணரா வென்பால்
ஞானமுந் தெவிட்டா வின்ப நன்மையு நல்கு வாயே
பானலங் கவர்ந்த தீஞ்சொற் பச்சிளங் கிள்ளை கான
வானவ ரிறைஞ்ச மன்றுள் வயங்கிய நடத்தி னானே."

பாண்டியநாடும், நாய்க்க அரசர்களும்.

(முன்றொடர்ச்சி.)

6. முத்துவீரப்ப நாய்க்கர் (1609-1623)

முத்துகிஷ்டப்ப நாய்க்கருக்கு முத்து வீரப்பநாய்க்கர், திருமலை நாய்க்கர், குமாரமுத்து நாய்க்கர், என மூன்று குமாரருண்டு. இவர்களுள் முத்து வீரப்பநாய்க்கர் பட்டத்துக்கு வந்தார்.

முத்து கிஷ்டப்பநாய்க்கர் காலத்தில் ராமநாதபுரம் சீமை முழுமையும் பெரிய வனமாகவும், திருடர்களும், துஷ்ட மிருகங்களும் வசிக்கும் இடமாகவும். ராமேஸ்வரஞ் செல்லும் யாத்ரிகளுக்குப் பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. அந்நாட்டை சேதுபதியினிடம் ஒப்புவித்தப் பிறகே சீர்திருத்தப்பட்டு, பாதுகாக்கப் பட்டது.

மைசூரிலிருந்து மகமதியர் படையெடுத்து திண்டுக்கல்வரை வந்தார்கள். அவர்களை விருப்பாட்சிப் பாளையக்காரன் முறியடித்து துரத்தி விட்டான். அதனால் "பாதைக்காவலன்" என்னும் பெயரைப் பெற்றான்.

மொகல் சேனை படையெடுத்து வந்தபோது நடுக்கட்டளைப் பாளையக்காரன் சின்னக்காத்திரன், அவர்களை முறியவடித்து துரத்தினதால், அவனுக்கு திண்டுக்கல் சீமை முழுமையுங் கொடுக்கப் பட்டது.

இவன் காலத்தில் கிறிஸ்தவ சமயம் பாண்டிய நாட்டில் பரவ நேரிட்டது. முத்து வீரப்ப நாய்க்கர், 1623-ம் ஆண்டில் காலமானார்.

7. திருமலை நாய்க்கர்
(1623—1659

முத்துவீரப்ப நாய்க்கர் இறந்தபிறகு, அவர் சகோதரர் திருமலை நாய்க்கர் பட்டத்துக்கு வந்தார். வழக்கம்போல் ஸ்ரீமீனாட்சியம்மன் சந்நதியில் மகுடாபிஷேகஞ் செய்துக்கொண்டு, ஸ்ரீமீனாட்சியம்மையார் திருக்கரத்திலிருந்து, விக்கிரம பாண்டிய ஸ்தானிகராகிய சதாசிவ பட்டர் வாங்கிக் கொடுக்க செங்கோலும் பெற்று திருச்சினாப்பள்ளியை தலைநகராக்கிக் கொண்டு மதுரை முதலிய தேசங்களை யாண்டு வந்தார். இத்திருமலை நாய்க்கருடைய பெயரை யறியாதவர் தென் இந்தியாவில் மிகச் சிலரே! இவர் மதுரையிலும், ஸ்ரீரங்கத்திலும் இன்னும் சில ஊர்களிலும் பல நேர்த்தியான கட்டடங்கள் அமைத்துள்ளார். இவர் பலிஜ நாய்க்கர்களின் வம்ஸத்தைச் சேர்ந்தவர். பாண்டிய நாட்டைப் புரந்து வந்த வடுகவரசர்களுள் ஏழாவது பட்டத்து அரசர். இற்றைக்கு முன்னூறு வருடங்களுக்கு முன்னிருந்தவர். இவரது உருவம் மதுரை புதுமண்டபக் கற்றூணிலும், மீனாட்சியம்மன் கோயில், அழகர் கோயில், திருப்பறங்குன்றக் கோயில் முதலியவைகளிலும் வைக்கப்பட்டுள்ளன. இவர் திருச்சினாப்பள்ளியை தலைநகராக்கிக்கொண்டு அரசாண்டு வருங்காலத்தில் கன்மவசத்தினால் க்ஷய ரோகத்தால் அன்ன ஆகாரமின்றி துன்பத்தால் வருந்தினார். அந்நோயைத்தீர்ப்பதற்கு பலவித ஔஷதங்கள் புசித்தும்' திருவரங்கம் ஜம்புகேஸ்வரம் முதலிய ஸ்தலங்களில் வாங்கிடந்து, பிரார்த்தனைகள் செய்துகொண்டும், அந்நோயகலவில்லை. ஸ்ரீமீனாம்பிகை மகுடாபிஷேகத் திருநாளன்று அம்மையார்க்குப் பிரதிநிதியாக அரசாளும் மன்னர் அச்செங்கோல் வாங்குவது வழக்கமானதால், செங்கோல் வாங்க நோயின் சிரமத்தோடு மதுரைக்குவந்தார். வரும்வழியில் திண்டுக்கல்லில் தங்க நேர்ந்தது. அன்றிரவு அவர் கனவில் சோமசுந்தரக் கடவுள் சித்தரூபங்கொண்டு எழுந்தருளி, "அரசே! புராதனஸ்தலமாகிய மதுரையை நீவாஸஸ்தலமாமக் கொண்டு மீனாட்சியம்மைக்கும், சுந்தரேஸ்வரருக்கும் பூசை உற்சவாதி திருப்பணிகளை நடத்தி அரசும் புரிந்து வருவாய்" என்று கூறி, திருநீறும் அளித்தனர். உடனே விழித்து "இது என்ன ஆச்சரியம்" என்று வியந்து, தம்முடன் வந்த பிராமணர், மந்திரி முதலியவர்களை யழைப்பித்து நடந்ததைக்கூற, அவர்கள் கடவுள் திருவாக்கின்படியே செய்தல் நலமென்றார்கள். கடவுள் எமது நோயை போக்கியருளின் மதுரையிலேயே எமது அரசை ஸ்தாபிப்பதோடு, பல திருப்பணிகளுஞ் செய்து முடிக்கிறேனென பிரார்த்தித்துக் கொண்டார். உடனே நோய் நீங்க விபூதி தரித்து சைவசமயத்தை யநுசரித்து வந்தார். திண்டுக்கல்லினின்று மதுரை வந்து நம் முன்னோர்கள் வசித்துவந்த அரண்மனையில் தங்கினார். அவ்வரண்மனை தற்காலமிருக்கும் கலெக்டர் ஆபீஸாகக் கருதப்படுகிறது. (இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

ஷகந்தரும் திண்டிமகவியும்.

—(0)—

கிரேக்கர் அரசனாகிய ஸிகந்தரென்னும் சூரன் இந்துதேசத்தின்மீது படையெடுத்து வந்தகாலத்தில், இத்தேசத்தில் கற்றறிந்து ஞானமார்க்கத்தை அநுசரித்துவந்த தெய்வ பக்தியுடைய பிராமணர்கள் அனேகர் இருந்தனர். அவர்களுடைய கல்வித்தேர்ச்சியையும் ஒழுக்க வாசாரங்களையும் ஸிகந்தர் கர்ண பரம்பரையாகத் தெரிந்து அதிக ஆச்சரிய மடைந்தான். அவர்களுடைய மதசித்தாந்தங்களையும் ஆசார கோட்பாடுகளையும் விசாரித்து' அந்தப் பிராமணரிற் சிலரைப் பார்க்க விரும்பினான். அவர்களுடன் செய்த சம்பாஷணையால் அவனுக்கு முன் இருந்த ஆச்சரியமும், அவர்களை நேரில்பார்த்து வினவி அறியவேண்டுமென்கிற விருப்பமும், மேன்மேலும் அதிகப்பட்டது. அந்தப் பிராமணருள் மிகச்சிறந்தவராகிய "திண்டிமகவீஸ்வரர்" என்பவரைத் தன்னிடம் வரும்படி கட்டளையிட, அந்த மகரிஷி

யானவர், எந்த மனிதனானாலும் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்துடையவனாயினும், தான் அவர்களிடம் போகிறதில்லையென்கிற ஸங்கல்பமுடையவராக யிருந்ததால், நான் வருகிறதில்லையென்று சொல்லிவிட்டார். அதன்மேல் ஸிகந்தர் தான் அந்தப்பிராமணர்களின் மதக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் குறித்து, அநேக அபூர்வமான விஷயங்களைக் கேள்விப்பட்டிருப்பதாகவும், அவற்றின் உண்மையைத் திண்டிமரென்பவர் வாக்கினின்று நேரில் தெரிந்துகொள்ள வேண்டுமெனத் தான் கேட்டதெல்லாம் உண்மையென்று விளங்கும்பக்ஷத்தில் உடனே திண்டிமருக்குத் தான் ஸகாயனாகி விடத் தடை யிராதென்றும் கடிதம் எழுதி கடிதத்தின் மூலமாக அந்தப் பிராமணோத்தமருக்குத் தெரிவித்தான்.

இதற்கு மறுமொழியாக, திண்டிமகவிஸ்வரர் அடியில் வருமாறு எழுதியனுப்பினர்.

கேளும் ஸகந்தரே! எங்கள் சாஸ்திரிகளில் பயிற்சி செய்ய வேண்டுமென்கிற விருப்பம் உமக்கு இருப்பதினாலேயே நீரும் ஒரு ஞானி என்று நான் எண்ணுகிறேன். அதற்குச் சந்தேகமில்லை. ஆனால் உலகமுழுமையும் உமது ஆக்கினைக்குள்ளாக்கி எல்லா மனிதரையும் அடக்கி ஆளவேண்டுமென்று நீர் கொள்கிற ஆசையைப்பார்த்தால், உம்முடைய ஞானத்தைப் பற்றி எனக்குக் கொஞ்சம் சந்தேகம் பிறக்கிறது, யதார்த்தமான ஞானியானவன் கடவுளின் ஆக்ஞைக்கு சிறிதும் மீறாமல் கீழ்ப்படிவான். உம்முடைய நடத்தையும் அதிகார ஆசையும் அப்படி உண்மையான ஞானமடைவதற்குப் பெரிய விகாதங்களல்லவா? எங்கள் வழக்கங்களையும் ஆசாரங்களையும் உமக்குக் கற்பிக்க வேண்டுமென்று நீர் விரும்புகிறீர், ஆனால் அப்படிக் கற்பிக்க எனக்கு வாக்சாதுரியமும் உமக்கு யுத்தகாரியங்களின் கவலையில் கற்றுக்கொள்ளப் போதுமான அவகாசமும் இராதாகையால், உமது கேள்விக்கு நான் இசையேன். ஆயினும் நீர் என் அபிப்பிராயத்தைக் கேட்கிறபடியால், அதை இங்கு வெளியிடுகிறேன். நான் முகஸ்துதியாக ஒன்றும் சொல்லமாட்டேன். உண்மையே எங்களுக்கு வழிகாட்டி. கபடவேஷம் என்பது எங்களுக்குத் தெரியாது.

பிராமணர்களுடைய வாழ்க்கை அதிக பரிசுத்தமும் நேர்மையுமானது. மற்ற மனிதரை மயக்கிக்கெடுக்கிற சிற்றின்பம் எங்களை வசியப்படுத்த மாட்டாது. எங்களுடைய இச்சைகள் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவை. கிடைத்த பொருளுடன் திர்ப்தியா யிருப்பதே எங்களுக்குச் சுபாவம். என்ன துன்பம் நேரிட்டாலும், எங்கள் வாக்கினின்று வெறுப்பான சொல் யாதும் வெளிப்படுகிறதில்லை. ஆகார விஷயத்தில் எங்களுக்கு அதிக இச்சையில்லை. ருசியென்கிற பேரைமாத்திரம் கேட்டிருக்கிறோமேயன்றி அதை நாங்கள் நாவினால் உருசி பார்த்தறிந்ததில்லை. ஒருவித முயற்சியும் கஷ்டமுமின்றி, தானேவிளைகிற கந்தமூலங்களும் காய்கிழங்கிலைகளுமே எங்களுக்காகாரம். ஆனதுமன்றி, வியாதி இன்னதென்று அன்னியர் அனுபவிக்கக் காண்கிறோமேயன்றி நாங்கள் அனுபவித்ததே யில்லை. எங்களுடைய குற்றமற்ற சுகத்துக்கு ஏதேனும் இடையூறு சம்பவித்தால், அது அவர்களுக்கு நேரும் துன்பத்தைப் பார்க்கச் சகியாமல் உண்டாகுமேயொழிய மற்றப்படி உண்டாகாது. நாங்கள் எல்லாரும் சமமானபடியால் ஒருவரும் பராதீனப்படாமல் சுவாதீனர்களாக இருக்கிறோம்.

அழுக்காறவாவெகுளியின்னாச்சொனான்கும் இழுக்காம் என்பதுபோல

நாங்கள் பொறாமை, கோபம், விரோதம், அதிகாரம் முதலிய துர்க்குணங்களை அறியோம் அவர்களையும் குற்றம் ஒன்றும் செய்கிறதில்லையாதலால் எங்களுக்கு நியாயஸ்தலங்களைப்பற்றி நினைக்க அவசியம் இல்லை. சன்மார்க்கமாக நெறிதவறாமல் வாழ்கிறபடியால், மற்ற மனிதருக்குள் உண்டாகும் துன்மார்க்கத்தைத் தண்டிக்கும் பொருட்டு ஏற்பட்டிருக்கிற சட்டங்கள் எங்களுக்குள் ஒன்றும் கிடையா, மேலும் அப்படிப்பட்ட சட்டதிட்டங்களை ஏற்படுத்தினால், அவை எந்தத் தீமைகளை நீக்கமுயல்கின்றனவோ, அப்படிப்பட்ட கெட்ட எண்ணங்கள்

எங்களுக்குள் உண்டாகுமோ என்னவோ வென்று அஞ்சுகிறோம். எங்களுடைய சட்டமெல்லாங்கூடி சிருட்டிப்பு இயற்கைக்கு மாறாக நடவாமலிருப்பதேயாம். இவ்வாறு எவ்வித நிந்தையான காரியங்களிலும் நாங்கள் பிரவேசியாமலிருப்பதால் எங்களுக்கு மன்னிப்புக் கிடைக்கவேண்டு மென்கிற அவசியமுமில்லை. பிறர்களை மன்னிக்கவேண்டிய காரணமுமில்லை கைக்கூலி பரிதானம் கொடுத்து தண்டனையினின்று தப்பித்துக் கொள்ளவேண்டு மென்கிற அவசியமும் எங்களுக்குக் கிடையாது. பொருளாசையே இவ்வகையான துற்குணங்களுக்குக் காரணம். இவற்றால் நியாயாதிபதியே குற்றவாளியை விட அதிக குற்றமுள்ளவனாகிறான்.

எங்களில் சோம்பலும் தூக்கமும் ஆகாதே. அன்னச்சுவியு மோகமுங் கொள்ளாதே என்றபடி. சோம்பலும் தூக்கமும் உள்ளவர்களைக் கடுமையாகத் தண்டிப்போம். எல்லாவிதத் துன்பத்துக்கும் மூலமாகிய காமவிகாரத்துக்கு மிகப்பயப்படுவோம். காமத்துக் கடிமைப்பட்ட மனிதரை நாங்கள் விலக்குவோம். தேக சுகத்துக்கு இன்றியமையாதவற்றைத் தேடுவதே எங்கள் உத்தேசம். அதைவிட்டு வேறெந்த சுகத்தை நாடுவதும் துன்பமேயாம்.

“இது என்னுடையது,” “அது உன்னுடையது”என்கிறசொல்வரையறைஎங்களுக்கில்லை. அப்படிப்பட்ட எண்ணம் இயற்கைக்கு மாறானது. எந்தெந்தப் பொருளின்மேல் எங்களுக் கிஷ்டமோ, அதை எடுத்துக் கொள்ளுகிறோம். கொல்லாவிரத மொன்றைக் கொண்டவரே நல்லோர் என்றபடி பக்ஷிகள் யதேச்சையாகப் பறக்கவும், மச்சங்கள் தண்ணீரில் தாராளமாக நீந்தவும் இடங்கொடுப்போம். அவற்றிற்கு யாதொரு துன்பமும் செய்யோம். அவசியமில்லாத பொருள்களின்மேல் எங்களுக்கு விருப்பமில்லாதபடியால், எங்களுக்கு வேண்டிய பொருள்கள் வேண்டியவரையில் கிடைக்கும். அடங்காப் பொருளாசையைப்போல் பயங்கரமானது வேறொன்றுமில்லை. இத்துர்க்குணத்தால் நமதுமனதில் அளவற்ற இச்சைகள் ஜனித்து, எவ்வளவுக்கெவ்வளவு பொருள் கிடைக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இன்னும் வேண்டுமென்கிற ஆசையால் தொல்லையும் அதிகரித்து நாம் நாளுக்குநாள் ஏழையாய் விடுகிறோம்.

எங்களுக்கு வெப்பத்தை யுண்டாக்கச் சூரியனும், குளிர்ச்சியைத்தர மழையும் பனியும் தாகத்தைத் தணிக்க ஆறுகளும், தேகத்தைப் போஷிக்கக் கிழங்குகளும் கீரைகளும், படுக்கப் பூமியும் உண்டு. எங்களுக்குத் துக்கமும் மனக்கவலைகளும் சிறிதேனு மில்லை. நாங்கள் சுவதந்திரராயிருப்பதால், ஒருவருக்கும் அடிமைப்படாமல் நிர்ப்பயமாக இருக்கிறோம். யாவரிடத்திலும் சகோதர பாவனையாகவும், கடவுள் சிருஷ்டியினால் எல்லாரும் சமமானவர்களாகவும் ஒரே கடவுளாகிய தந்தைக்குப் பிள்ளைகளாகவும் இருக்கிறோம். கடவுள் சிருஷ்டி எல்லாருக்கும் பொதுவானதல்லவா!

விறகின்பொருட்டு காடு வெட்டுகிற தென்பதாவது, வீடுகட்டுவதற்காகக் கற்களை உடைக்கிறதென்பதாவது எங்களுக்குத் தெரியாது. எங்களுக்குக் குடியிருக்க மலைக்குகைகளுண்டு. அவற்றில் காற்றுக்கும் மழைக்கும் குளிருக்கும் அஞ்சாமல் ஒதுங்கி இருக்கலாம். இந்த இயற்கையாகவே அமைந்த குகைகள் ஜீவகாலத்தில் எங்களுக்கு வாஸஸ்தானமாகவும் ஜீவகாலத்திற்கப்புறம் எங்களுக்குச் சமாதிகளாகவும் பிரயோஜனப்படுகின்றன. கொஞ்சமேனும் விலையுயர்ந்ததும் அழகுள்ளதுமான உடைபாவனைகளை நாங்கள் விரும்புவதில்லை. வெட்கத்தால் உடம்பைக் காட்டாமலிருக்க இலைகளையும் மரப்பட்டைகளையும் ஆடையாகத் தரிப்போம். நாட்டில் மற்ற ஸ்திரீகள் செய்வதுபோல் எங்கள் ஸ்திரீகளை அலங்கரித்துக் கொள்ள நாங்கள் இடங்கொடோம். அப்படி ஒருவாறு இடங்கொடுத்தாலும், அவர்கள் அவர்களைப்போல சிங்காரித்துக்கொள்ள விரும்புகிறதில்லை. டம்பமான துணிமணிகளெல்லாம் வீண்சுமையேயொழிய அவ்வளவாக அலங்காரமானவையல்ல, செயற்கை அழகு இயற்கை அழகை ஒருபோதும் சிறப்பிக்க

மாட்டாது; குரூபத்தை மறைக்கமாட்டாது. இதுவே அவர்கள் கருத்து. இப்படியெல்லாம் உடையாவனை விஷயத்தில் கவலைப்படுவது வினை இயல்பான அங்கக்குறைவை சீர்ப்படுத்தமாட்டாதே. கடவுள் சிருஷ்டியைச் செயற்கை அழகால் சீர்திருத்தமுயல்வது ஒரு விதத்தில் குற்றமுள்ளதாகும். இப்படி யிபற்றையா யிருந்தும் எங்கள் ஸ்திரீகளுக்கு எங்களிடத்தில் விருப்பக்குறைவுண்டோ? இல்லை. விவாஹ பலனையழித்து ஜனங்களுக்கு அதிக அவமானத்தை உண்டுபண்ணுகிற வியபசாரம் முதலிய தோஷங்கள் அவர்களிடத்தில் பேருக்குக்கூடக் கிடையா.

"எங்கள் ஜனங்கள் எப்போதும் சாந்தம் பொறுமைகுணம் முதலான நன்னெறிகளையே பின்பற்றி நடக்கிறார்கள். "கொலை" என்கிற வார்த்தையைநினைக்கையிலேயேஎங்கள் அந்நிய தேசத்தாரை ஒருபோதும் கோபமூட்டுகிறதில்லை. எங்களுக்கும் எங்கள் அயலாருக்கும் சாந்தகுணத்தாலேயே சவுக்கியம் உண்டாயிருக்கிறது. பலவந்தத்தால் ஒன்றுமாகிறதில்லை. அதிர்ஷ்டம் ஒன்றே எங்களுக்குப் பெரிய சத்துரு. நாங்கள் எப்போதும் அதனுடன் போராடவேண்டியிருக்கிறது. அதனால் உண்டாகும் பலவித கெடுதியும் எங்களை வருத்தச் சக்தியுள்ளவையல்ல. எப்போதும் எங்களூழ்வினைக்குவிரோதமாக ஒன்றையும் செய்கிறதில்லையாதலால், நாங்கள் ஒருவர்மேலும் ஒருபோதும் குறைகூறுகிறதில்லை. முதுமைப்பருவத்தால் தேகம் தளர்ச்சியடைவதற்கு முன் மரணம் நேரிட்டால் மாத்திரமே நாங்கள் இயமனை வெறுப்போம். அப்படிப்பட்ட அகாலமரணங்களில் தகப்பன் தன்பிள்ளையின் இழவுக்குப் போகிறதில்லை. நாங்கள் எந்த வயதில் மரணமடைந்தாலும் ஜம்பமான கோரிகளைக் கட்டுகிறதில்லை. அப்படிச்செய்வது பிதுர்களின் தாழ்மையான நிலைமைக்கு விரோதமானது. உருவழிந்த ஒரு தேகத்தைக் காட்டிலும் மனதுக்கு அருவருக்கத்தக்கதும் அச்சமுண்டாக்கத்தக்கதும் அல்லாமல் வேறென்ன உண்டு! அப்படிப்பட்ட கருபம் குலைந்த தேகம் இவ்வுலகத்தை அசுத்தப்படுத்தாதபடிக்கு நாங்கள் அதை அக்கினியால் அழித்து விடுகிறோம்.

இப்படிப்பட்ட எங்களுடைய குணங்களை உங்கள் குணங்களுடன் ஒப்பிடப்போகிறேன். நீர் என்பேரில் கோபிக்கவேண்டாம். நீர் இவ்வுலகத்தை யேற்கனவே எவ்வளவு பாழாக்கியிருக்கிறீர்! பணம் சம்பாதிக்கவும் அதிகாரம் அடையவும், நீர் உமது சொந்தக் கையாலும், பிறருடைய கைகளாலும் எத்தனைபேரைக் கொன்று ரத்தம் பெருக உண்டாக்கியிருக்கிறீர்! நீர் குழந்தைகளை பலவந்தமாக அவற்றின் தகப்பன்மாரிடத்தினின்று பறித்தும், அவைகளுக்குச் செய்யும் சடங்குகளில்லாமலும், அவைகளைச் சேமித்திருக்கிற கோரிகளை இடித்தும், என்னென்ன அக்கிரமங்கள் செய்திருக்கிறீர்! சூரியன் உதயமாகிற திக்கைநோக்கி, அதைத் தன் கதியில் ஓட ஒட்டாமல் தடுக்க முயலுகிறவன்போல் அதி உக்கிரமாய் ஓடுகிறீர். நீர் அநேக சிம்மாசனங்களை அழித்து, இராஜாக்களைச்சிறையாக்கி,அவர்களுக்குக்காற்றளை பூட்டி உமது ஜயத்துக்கலங்காரமாயிருக்கும்படி, அவர்களை இழுத்துக்கொண்டு போகிறீர். உமது புத்தி ஸ்திரமின்மையால் சுயாதீனரான நகரவாசிகளை அடிமைப்படுத்தி, அடிமைகளைச் சிறையினின்று விடுவித்திருக்கிறீர். நீர் தேசாதிபதிகளுக்கு லஞ்சங்கொடுத்து, பட்டணங்களை வசப்படுத்தலாமென்றும், பாதாளலோகத் தாசர்களையும் அதேவிதமாக துன்மார்க்கத் தனத்தால் வசப்படுத்திக் கொள்ளலாமென்றும் நினைக்கிறீர். உமது குணத்தை இதுவரைக்கும் வர்ணித்தது போதும். இனி எங்கள் விதிவிலக்குகளை உமக்குத் தெரிவிக்கிறேன். உமக்குச் சந்தோஷத்தைத் தருவதான பெருங் குழப்பமுள்ள கூட்டங்களும், வேட்டைகளும், கூத்துகளும், எங்களுக்குச் சுத்தமாகத் தெரியாது. நாடகத்தை பூனப்பூர்வமாக வெறுத்துப் பரிகாசமான காரியம் ஒன்றிலும் பிரவேசியாத எங்களிடத்தில் உம்முடைய கூத்தாடிகள் என்ன செய்வார்கள்! குரூரமான செய்கைகள் ஒன்றுமில்லாத எங்களிடத்தில் உமது நாடகப்புலவர்கள் எழுதத்தக்க விஷயம்

என்ன உண்டு? சிறுபிள்ளைகள் துஷ்ட மிருகங்களை எதிர்க்கவும், பலமும் சாத்திர தேசமுமுள்ள ஜனங்கள் இரக்கமின்றி ஒருவரையொருவர் தாக்கி அடித்துக் கீழே தள்ளவும் கண்டால், பிராமணர்களுக்கு விபரீத கோபமுண்டாகும். எங்களுக்கு அதிக இஷ்டமான காட்சியைத் தருவது ஆகாசமே. ஆகாசத்திலுள்ள சூரிய சந்திர நக்ஷத்திரங்களின் ஒழுங்கையும், திட்டத்தையும், கிரமத்தையும், சகலத்தையுங்கண்டு ஆச்சரியமடைகிறோம். சூரியன் நாற்புறத்திலும் தன் கிரணங்களை விளங்கச் செய்துகொண்டு தன் நீல வர்ணமான தேர்மேலேறிச் செல்லுகையிலும், அவன் பிரதி வருஷம் தப்பாமல் முன்புறப்பட்ட இடத்துக்கு வந்து சேர்வதையும் பார்த்தால் எங்களுக்குண்டாகிற சந்தோஷம் கொஞ்சநஞ்சமல்ல. ஆகாசத்தை விட்டுப் பிரபஞ்ச சிருஷ்டியைப் பார்த்தாலும், எங்களுக்குண்டாகிற ஆச்சரியம் கொஞ்சநஞ்சமல்ல. அதன் அழகு மனதினால் அளவிடக் கூடாதது. பட்சிகளின் பாட்டும், ஊற்றுக்களின் காட்சியும்; காட்டுப் புஷ்பங்களும், ஒரு பூண்டின் தண்டும் இவையெல்லாம் எங்களுக்கு அதிக சந்தோஷத்தை யுண்டாக்கி, கடவுளின் சக்தியைக் குறித்து அதிகமாக யோசிக்க இடங்கொடுக்கின்றன.

எங்கள் சுதேசத்தில் இயற்கையாக உற்பத்தியாகும் பொருள்களோடு நாங்கள் திருப்தியடைந்திருப்பதால், நாங்கள் பாராத அந்நிய தேசத்து அதிசயப் பொருள்களைக் காண அலைகிறதில்லை. எங்களுடைய சௌக்கியத்துக்கு உதவாத பொருள்கள்மேல் எங்களுக் கிஷ்டமில்லை. உங்களுடைய வாக்சாதுரியத்தைக் கண்டு நாங்கள் அதிசயப்படோம். அது பொய்க்கு மெய்த் தோற்றத்தை உண்டாக்கி, துன்மார்க்கத்தை மறைத்து, குற்றமின்மையைக் குற்றமுள்ளதாக்கி, தகப்பனைக் கொலைசெய்யவும், சில சமயங்களில் நியாயமென வாதிக்கும் ஒரு கொடுமையான வித்தை. எங்களுடைய வாக்சாதுரியமெல்லாம் கூடிய உண்மையை விடாமல் தழுவுவதே.—இவைதான் எங்களுடைய ஆசாரம். இனி எங்களுடைய மதக் கொள்கைகளைக் கூறுகின்றேன் கேளும்!

பிராமணர்களுடைய முக்கியமான கொள்கை என்னவெனில், குற்றமற்ற ஜந்துக்களைப் பலிகொடுத்து அவற்றின் ரத்தத்தால் தங்கள் யாகங்களை அபரிசுத்த மாக்கக் கூடாதென்பது. அவர்கள் தங்கள் தேவாலயங்களைப் பொன், வெள்ளி, இரத்தினம், இவற்றால் அலங்கரிக்கிறதில்லை. சுவாமிக்கு வேண்டாத பொருள்களைக் கொடுக்க முயலுவதாவது, அவரே பெறக்கூடிய எல்லா ஐசுவரியத்தையும் நாம் ஜம்பமாக எடுத்துக் காட்டுவதாவது, அவரை இகழ்ச்சி செய்வதற்குச் சமானம்:—கடவுளை நாம் பரிசுத்தமாகத் தொழவேண்டுமே யொழிய குரூரமான செய்கைகளால் அவரை வணங்கலாகாது. மனிதர் கடவுளைத் தங்கள் பிரார்த்தனைகளாலும் மனத்தாழ்மையாலும் திருப்திப் படுத்தவேண்டும். பிரபஞ்சமே அவர்தான் அவர்தான் நமது கண்ணுக்குப் புலப்படுகிற உலகத்தைச் சிருஷ்டித்து, ரக்ஷித்து, பரிபாலித்து, ஆண்டுவருகிறார். அவர் சுத்த ஆவி ஸ்வரூபியானதுபற்றி, அவர் நம்மிடமிருந்து சன்மார்க்கத்தையும் சன்மார்க்க காரியங்களையும் வேண்டுகிறாரே தவிர, மற்றொன்றையும் விரும்பதில்லை.

இவ்வாறு எங்கள் மதத்தை நான் விவரித்த பிறகு, அதை உமது மதத்தோடு ஒப்பிட்டுப் பாரும் அல்லது நானாவது ஒப்பிட்டுக்காட்டுகிறேன். கேளும் உமது மதத்தின்படி கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டீரென்றும் அவருக்கும் உமக்கும் ஒருவித சம்பந்தமுண்டென்றும் ஒப்புக் கொள்ளமாட்டீர். இந்த மூடத்தனத்தைப் பார்க்க எனக்கு அதிக விசனமுண்டாகிறது. நீர் ஒரு உயர்ந்தவம்சத்தில் பிறந்தீரே என்கிற பெருமைதவிர வேறொரு பெருமையும் உமக்கில்லை. உம்முடைய யதார்த்தமான பிறப்பை மறந்து, ஒவ்வொன்றையும் மாமிசத்தோடு சம்பந்தப்படுத்தி, எல்லாச் சந்தோஷமும் தேகசுகம் என்று நினைக்கிறீர். மேலான பொருளை மறந்துவிட்டீர். நீர் அந்தத்தேகத்தை அதிக ஊக்கத்தோடு வளர்த்து, அதிக ஆகாரத்தால்

கொழுக்கச்செய்து, அந்தத்தேகம்தவிர மற்றொன்றையும் விரும்புகிறதில்லை. நீர் அழிவில்லாத ஆத்துமாவைக் கவனியாமலே மாம்சமாகிய தேகத்தையே மேலாகக் கொள்ளுகிறீர். உங்கள் தேசத்தார் உண்மையான கடவுளை அறியாமல் எண்ணிறந்த சிற்சில தேவதைகளை வணங்குகிறார்கள். சுகத்துக்கும் தீமைக்கும் வேறுவேறு அதிதேவதை யிருப்பதாக நினைத்து அதற்குப் பற்பல ஜந்துக்களை பலியாகக் கொடுத்து உபசாரம் செய்து வருகிறார்களே யல்லாமல் யாவரையும் சிருஷ்டித்த ஒரே கடவுளை மறந்துவிட்டார்களே. பாவிகளே! உங்கள் மதாசாரம் ஜீவகாலத்தில் குற்றங்களாகவும் மரணத்துக்குப் பின் தண்டனையாகவும் இருக்கிறது."

இவ்வாறு எழுதிய கடிதத்தை வீசுந்தர் படித்துப் பார்த்தபொழுது, அந்தப் பிராமணன் கர்வம் கொண்டவனும் தெய்வபக்தி யில்லாதவனுமென்று சொல்லிவிட்டானே யன்றி பிரதியாகத் தக்கபடி ஒன்றும் தெரிவிக்கவில்லை.

மூப்புவராமல் காப்பது.

நமது வாழ்நாளைச் சுகமாக அனுபவிக்க வேண்டுமே யொழிய எவ்விதத்திலும் வீணாக்கலாகாது. ஒருவனுடைய வாழ்நாள் அற்ப வாழ்வா பெருவாழ்வா என்பதை அவன் வயதைக்கொண்டு நிதானியாமல், மற்றவர்கள் நன்மைக்காகவும் தன் பொதுநலத்துக்காகவும் என்னென்ன செய்திருக்கிறானோ அதற்கேற்றபடி பெருமை சிறுமையைத் தீர்மானிக்க வேண்டும்.

நமக்கு முதுமைப்பருவத்தால் சற்றுத் தேகத்தளர்ச்சி யுண்டாகுமே யொழிய மற்றப்படி நமது வாழ்நாளைச் சரியாகக்கழித்தால், இருபதுவயதில் அனுபவித்த இன்பமும் மனத்திருப்தியும் 60-ம் வயதில் உண்டாவதற்குச் சந்தேகமில்லை. அன்றியும் நமது தேகதத்துவமானது அந்தந்தச் சந்தர்ப்பத்துக்கும் பருவத்துக்கும் ஏற்றபடி அமைந்திருக்கிறது.

பத்தொன்பது வயது வாலிபன் அறுபது வயது கிழவனுடைய வேலைகளையும் இன்பத்தையும் நிந்திக்கிறான். தனக்கு முற்றும் பயனற்றதாகவும் அருவருப்பாகவும் காணப்படுகிற காரியங்கள், அறுபதுவயது கிழவனுக்கு எப்படி இஷ்டமாயிருக்கும் என்று ஆச்சரியப்படுகிறான். இதற்குக் காரணமென்னவெனில், கிழவனுடைய தேகஸ்திதியும் மனநிலைமையும் இன்னவென்று ஒரு குமாரனுக்குத் தெரியாது. மேலும் இருபதுவயதில் நமது மனதுக்கு எது இசைந்திருந்ததோ அது 50-ம் வயதில் நமக்கு இஷ்டமாயிராதென்பது அவனுக்குத் தெரியாது.

நமது வாழ்நாளில் எல்லாப் பருவங்களிலும் இன்பமடைய வேண்டுமென்று கருத்துக் கொண்டால் நமது காரியங்களை வயதுக்குத் தக்கபடி தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். இளம் பிராயத்துப் பராக்கிரமும் ஐம்பது வயது மனுஷனுடைய தீவிரமும் அறுபதாம் பிராயத்தில் நமக்கு வரவேண்டுமானால் வருமா? நமது தேகக்கட்டுப்பாடு நமது வயது ஏற ஏற வேறுபடுகிறது.

ஒரு இளம்பிள்ளை வார்த்திகனுடைய ஸ்திதி இன்னதென்றும் அவனது விருப்பங்கள் இப்படிப்பட்டதென்றும் தெரிந்துகொள்ளச் சாத்தியப்படாது. ஒரு கிழவனோ தன் வாலிபத்தைக் கொஞ்சமும் மறவாமல் அக்காலத்தில் தான் எந்தெந்த விஷயங்களில் ஏமாந்து போனதும் என்னென்ன பொருள்களிடத்தில் விருப்பங்கொண்டிருந்ததும் தனக்கு என்னென்ன சுகதுக்கங்கள் நேர்ந்தனவென்றும் தப்பாமல் ஞாபகத்தில் வைத்திருப்பான். நமக்குப் பாலியத்தில் இருந்த ஆத்திர குணத்தையும் துடுக்கையும் வயதின் தோஷமென்று கண்டிக்காமல் விட்டுவிட்டாலும் கிழவர்கள் ஏன் மந்தமாகவும் சிந்தனையுள்ளவர்களாகவும் இருக்கிறார்களென்று அதிசயப்படுவோம்.

ஆகவே நமது வயது செல்லச் செல்ல சுகாதார நுட்பங்களை மறவாதிருந்து அபவில் உள்

ளவர்களுக்கிசைந்து நடந்தால் மூப்பின் வருத்தம் தோன்றாது சுபாவத்திலேயே நமக்கு வயது செல்லச் செல்ல நாம் இவ்விஷயங்களில் எச்சரிக்கை யுடையவர்களாவோம். அப்படித் தவறினால் அதிக நஷ்டம் விளையுமென்று நமக்குத் தெரியும். நாம் ஏற்கனவே சுற்றுமுற்றும் விழிப்புள்ளவர்களாகவே இருக்கவேண்டும்.

நம்முடைய குணங்களும் ஆசைகளும் நமக்குத் தெரியாமலே மாறுகின்றன. நமக்கு முதுமைப்பருவம் வந்தகாலத்தில் நமது சக்தி ஒன்றும் குறைவில்லை யென்று சந்தோஷமடைகிறோம். இளமைப்பருவங் கடந்து மூப்பு வந்தால் எல்லாச்சக்திகளும் குறைந்துபோமென்று ஜனங்கள் சாதாரணமாக நினைக்கிறார்கள். ஆனால் அதிக புத்திமான்களும் வயதின் பிரபாவத்தை யறிந்தவர்களும் அப்படி அபிப்பிராயப்படவில்லை. வயதானவர்களுக்குப் புத்தியாவது சுறுசுறுப்பாவது கொஞ்சமும் குறையாமல், அனேக பாலியர்கள் மேற்சட்டமாகக் கொள்ளத்தக்கதாய், தீவிரமும் மனோபலமும் அதிகரித்திருக்கிறது.

முதுமைப்பருவத்தில் அநேகர் மேலான மனோபல மடைகிறார்கள். அனேக கீர்த்திமான்களின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர்களுக்கு அதிக மூத்தவயது வரையில் மனோபலம் கொஞ்சமும் குறையவில்லை யென்று தெரியவருகிறது.

சாதாரண சனங்களுடைய பாஷாக்யானம் எந்தப்பருவத்தில் அதிக விருத்தியடைந்திருக்கிறது என்று அறியக்கூடாது. ஆனால் அவர்களுடைய நடக்கையை நன்றாய்ப் பரிசோதித்தால் அவர்கள் 45-ம் பிராயம்முதல் 55-ம் பிராயம் வரைக்கும் வாச்சாதுரியம் அதிகப்படுகிறதாகத் தீர்மானிக்கலாம். நன்றாகக் கற்றவர்களும் மூத்தவயதில் தான் அதிக மேன்மையடைந்ததாகத் தெரியவருகிறது. பேசுந்திறமையில் கீர்த்திபெற்ற டெமாஸ்தினிஸ் என்பவரின் பிரசங்கங்களில் மிக்கச் சிறந்தது 50-ம் பிராயத்தில் செய்யப்பட்டது. பர்க்கு என்னும் புலவர் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு விரோதமாகச் செய்த வியக்கத்தக்க பிரசங்கம் 55-ம் பிராயத்துக்கு முன் செய்யப்படவில்லை. ப்ரைட் துரை முதலில் சற்றுக் கடுமையான பேச்சுள்ளவராயிருந்தும் அவருடைய 45-வது வயதில் செய்தப் பிரசங்கம் அதிக திறமானது. இப்படியே டிஸ்ரேலி, புலவர் லிட்டன், டார்ப்பிபிரபு முதலான பெரியோர்களும் பிரபலமான பிரசங்கம் செய்தது 45-வது முதல் 55-வருஷத்துக்குள்ளாகத் தான் இதுவரையிலும் பேசுந்திறமையைக் குறித்துச் சொன்னோம். எழுதும் சக்தியைப் பார்த்தாலும் முதுமைப் பருவத்தில் தான் மேலான கிரந்தங்கள் எழுதப்பட்டனவென்று அறியலாம்.

கவனசக்தியும் முதுமைப் பருவத்தில்தான் பூரணசாமார்த்தியத்தை அடைகிறது. அருமையாகச் சில கவிகள் பாலியத்தில் உன்னத தசையடைந்ததுண்டு. பொதுப்படப் பார்த்தால் மேலான கவிவாணர்களின் கிரந்தங்கள், அவர்களுடைய நடுவயதில் அல்லது முதுமைப் பருவத்தில் தான் எழுதப்பட்டது.

கனமான வால்மீகி புத்து மூடிப்போகும்படி வெகுகாலம் தவம் செய்து கொண்டிருந்து இராமாயணம் பாடினாரென்றும் ஒரு யுகமெல்லாம் ஜீவதசையிலிருந்து வியாசர் வேதத்தை சிக்கறுத்து வேதப் பொருள்களைப் பாரதச் செய்யுளாக இயற்றினாரென்றும் நமது நாட்டில் கேட்டிருக்கிறோ மல்லவா? அதுபோலவே இக்காலத்தில் மேனாட்டிலிருந்த மில்தன் கவிராயர் பாரடைஸ்லாஸ்ட் என்பதை 57-வது வயதிலும், போப் என்னும் கவிஞர் வாஜில் மொழிபெயர்ப்பை 66-வது வயதிலும், ஜான்ஸன் வித்தியாபாரகர் கவிகள் சரித்திரத்தை 72-வது வயதிலும், எழுதினார்களாம்.

ஐம்பது வயதுக்கு அதிகப்பட்ட இரண்டு பத்திராதிபர்கள் தங்களுடைய எழுதும் சக்தியும் மனோவேகமும் 20 வருஷங்களுக்கு முன்னிருந்ததைக்காட்டிலும் இப்போது அதிகப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மேற்சொன்ன விஷயங்கள் அதிக முக்கியமானவை. வயது ஏற ஏற புத்தியின் சக்தி குறைவாகிறதென்பது லோகவதந்தியே யொழிய உண்மையானதல்ல. ஒவ்வொருவனுடைய

மனோபலம் அவனுடைய தேகதத்துவத்துக்கு ஏற்றதாயிருக்கும். பலவீனப்பட்டிருக்கிறவன் மூளையிலே மிகுந்த புத்தி வலிமையை எதிர்பார்க்கலாகாது. இப்பொழுது நாம் பிரஸ்தாபித்து வருகிற புத்திபலமானது ஏதோ காரணத்தால் வியாதிப்பட்டிருக்கிற மனிதருக்கு ஒவ்வாது. நாம் சொல்லுவதெல்லாங் கூடி கிரமமாக வியாதியில்லாமல் இருக்கிற விருத்தாப்பியத்தைக் குறித்தே. நமது சீவகாலத்தை வியாதி ஒன்றுமில்லாமல் ஆரம்பித்துக் கிரமப்படி செலவழித்துக் கொண்டுவந்தால் தேக உழைப்பும் மனவுழைப்பும் கொஞ்சமும் குறையாமல் விருத்தியாய் வரும்.

புத்திக்கு ஆதாரமாக நமது நெற்றிக்குப் பின்புறத்தில் மூளைமடல்கள் என்கிற உறுப்புகள் உண்டு. இந்தமடல்கள் சாதாரணமான மிருகங்களுக்கு சிறியவையாயும் மனிதர்களுக்கு அதிக பூரணமாயிருக்கும் மனிதர்களுக்குள்ளும், அதிக புத்திக்கூர்மையுள்ளவர்களுக்கு மேற்கண்ட மடல்கள் மிகப்பெரிதாயிருக்கும்.

குரங்கின் தேகத்தில் இந்த புத்திமடல்களை அழித்துப்பார்த்தாலும், மனிதருக்கு வியாதி முதலானது நேரிட்டு அந்த மடல்கள் அழிந்துபோனாலும், அந்த ஜந்துவுக்கும் மனுஷனுக்கும் புத்தி குறைந்துபோகிறது. குணங்கள் ஸ்திரமில்லாமல் வேறுபட்டுப் போகிறது. இந்த மடல்களிலிருந்து மனிதனுடைய அநேக உயர்ந்த சக்திகள் உற்பத்தியாகின்றன. அவற்றின் சக்திகளையெல்லாம் இங்கே விவரிக்கச் சாத்தியப்படாவிட்டாலும் புத்திக்கும் பகுத்தறிவுக்கும் முற்கூறிய மடல்களே முக்கியமான ஆதாரமென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

புத்தியும் பகுத்தறிவும் பேசுந்திறத்தைப் போல் நடுவயதில் உண்டாகிறதில்லை. அவை அபரவயசிலேயே விர்த்தியடைகின்றன. முக்கியமாக அவ்விரண்டு சக்திகளும் 55, 56-வது பிராயத்தில் தான் பூர்த்தியடைகின்றன. மனுஷனுக்கு வயது ஏற ஏற ஞானம் அதிகப்படுகிறதில்லை. ஆகிலும் வயதில் முதிர்ந்து அனுபவத்திற்றேர்ந்த பெரியவர்களுடைய புத்திமதிகளை விசேஷமாக எக்காலத்தும் யாவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. எந்தக் கிரந்தங்கள் தேறித்தெளிந்த நியாயங்களடங்கியவையோ அந்தக் கிரந்தங்களெல்லாம் 55 வயதுக்கு மேற்பட்டவர்களாலேயே எழுதப்பட்டிருக்கின்றன. எல்லாச்சாதியாருக்குள்ளும் அதிமுக்கியமான பெருத்த ராஜகாரியங்களெல்லாம் வயதில் மூத்த பெரியோர்கள் சேர்ந்த இராஜசபைகளாலே தீர்மானிக்கப் படுகின்றன. அங்கிலேய தேசத்தின் பேர்பெற்ற நியாயசாஸ்திரங்கள் யாவும் 55 வயதுக்குமேல் 85 வயதுக்குட்பட்ட நியாயாதிபதிகளாலேயே எழுதப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய பண்டிதர் தன் 75-வது வயதில் அடியில் வருமாறு எழுதுகிறார்.

“எனக்கு வயது ஏறுகிறது நன்றாய்த் தெரிகிறது. கிரகிக்கிற சக்தி எனக்குச் சற்றே குறைந்திருக்கிறது ஞாபகசக்தியும் அவ்வளவு பலமில்லை. முன்போலக் கோர்வை கோர்வையாக அநேக பதங்களை மனதில் நிறுத்தச் சாத்தியமில்லை. ஆகிலும் முன்னைக்காட்டிலும் யுக்தியும் உணர்கிற சக்தியும் அதிகமாயிருக்கிறது.”

எது எப்படியானாலும் நாம் வார்த்திபத்தில் மனோபலத்திலும் தேகபலத்திலும் குறைவில்லாமல் இருக்க வேண்டுமானால் நமது பாலியத்தை தக்கபடிச் செலவழிக்கவேண்டும். பண விஷயத்தில் எப்படியோ அப்படியே நமது வாழ்நாளையும் பாலியத்தில் சரியாய் உபயோகியாத பக்ஷத்தில் அது நமக்கு முதுமையில் சுகமும், பலமும் உண்டாகமாட்டாது.

ஒரு பெரிய பிரபு சொல்லுகிறபடி நமது வாழ்நாளாகிய பிரயாணத்துக்குச் சீக்கிரத்தில் செல்லத்தக்க குறுக்குவழி யொன்றுமில்லை. அதைச் சரியாக நிறைவேற்ற நமது வாழ்நாள் முழுமையும் நாம் உழைக்கவேண்டும். வார்த்திப வயதில் சுகத்தையும் பலத்தையும் கொடுக்க வைத்தியரால் முடியாது. ஆனால் ஒன்று நிச்சயம். அதென்னவெனில் ஒருவன் வாலிபத்தில் எவ்வளவுக்கு சுகாதார விதிகளை அனுசரித்து மிதமான ஆகாரமுடையவனாயிருக்கிறானோ முதுமையில் அவ்வளவுக்கும் அவன் தீர்க்

காயுள் உள்ளவனுகவும் சுகதேகி யாகவும் இருப்பான்.

இங்கே நாம் சொன்னது ஒன்றும் புதியவையல்ல. அநேக புத்திமான்கள் ஏற்கனவே வெளியிட்டிருக்கும் கருத்துகளே.

அவர்களுடைய முக்கிய அபிப்பிராயம் என்னவெனில் கிழவனேப் பாலியனுக்குவது அசாத்தியமானுலும் நமது இராம்பிராயத்தை விணுக்காமல் இருப்போமானுல் உலகவாழ்க்கை வெகுநாள் நிலேநின்று நமக்கு தேகசுகமும் மனத்திர்ப்தியும் குறையாமல் இருக்கு என்பதேயாம்.

சான்ரேர் குலத்து ஆசாரங்கள்.

சென்ற மார்ச்சிமாதம், நமது க்ஷத்திரிய மித்திரனில் வெளிப்படுத்திய "பள்ளிகளின் குலவொழுக்க சட்டத்தை" யாவரும் வாசித்திருக்கலாம். அச்சட்டம் ஏறக்குறைய 1882-ம் வருடத்தில் அச்சிட்டிருக்க வேண்டும். அதேனெனில், அச்சட்டத்தில் 1872-ம் வருடத்தில் பள்ளிகளால் அச்சிட்ட "சாதிசங்கிரகசாரம்" என்னும் நூலே தெரிவித்திருத்தலால் அதற்கு ஒருபத்து வருடத்திற்குப் பின்பே அச்சிட்டிருக்க வேண்டுமெனக் கணிக்கப்படும். இப்பள்ளிகள் க்ஷத்திரியரென நூலெழுதுவதற்குமுன்பே, சான்றூர்கள் நூலெழுதி, அவர்களுக்குரிய ஆசாரங்களைத் தெரிவித்துள்ளார்கள். அவைது வருமாறு:—

சான்ரேர் மரபு.

அறுபந்தம், 73-வது பக்கம்.

(1871ல)

"சூரியசந்திரகுல க்ஷத்திரியரென்றும், க்ஷத்திரியகுலத்துச் சாதிகளுள் முன்னுன சாதியென்றும், தன்தாரத்தையன்றிப் பிறர்தாரந் தீண்டக் கூடாதென்றும், மறுவிவாகஞ் செய்யக் கூடாதென்றும், பெண்சாதி இறந்துபோனுல் மாத்திரம் மறுகலியாணஞ் செய்துக்கொள்ளலாமென்றும், அறுத்த பெண்ணுக்கு மறுவிவாகஞ் செய்யக்கூடா தென்றும், பொன்னுபரணமொன்றும் பூணக்கூடா தென்றும், வர்ணவஸ்திரங்கள் கட்டக்கூடாதென்றும், ஆண்கள் இடுப்பில் வஸ்திரம் மறுதார்ப்பாச்சாமல் குறுக்கே கட்டப்படாதென்றும், இக்குலத்தார் எந்தெந்தத் தேசத்திற்குச் சென்றபோதிலும் இரட்டைச்சங்கு சேர்ந்த தாலி கட்டவேண்டுமென்றும், சுபாசுபங்களில் இரட்டைச்சங்கு ஊதவேண்டுமென்றும்" கூறியுள்ளன.

சான்ரேர் மரபுகாத்தல்.

213, 214, 215-வது பக்கங்கள்.

(Rev. S. வின்பிரட். B. A.)

(1874ல)

"நாளதும் சான்ரேர் குலத்தவர்களுக் குள்ளிருக்கிற ஒழுங்கப்படிக்கும், அந்தக் குலத்தவர்களுக்குரிய முக்கிய ஆசாரங்களிற் சிலவற்றை இங்ஙனங்கூறுவோம்:

(1) ஒருதாரமிருக்க மறுதாரங் கட்டக்கூடாது. இது சான்ரேர் குலத்தவர்களுக்கு நாளதும் மாறாதசட்டம்.

(2) பிரியர்களை யிழந்தபெண்கள் மறுவிவாகஞ் செய்யக்கூடாது. இது சான்ரேர்குலத்தவர்களுக்கு நாளதும் பிரமாணம்.

(3) விதவைகள் வெண்வஸ்திரந் தரிப்பதேயன்றி, சிவப்பு முதலிய பலவர்ணப் புடவைகள் கட்டவுங்கூடாது. ஆபரணங்கள் பூணவுங் கூடாது. நாளதுஞ் சான்ரேர்குலத்து விதவைகள் வெண்ணுடை புனைந்து, நிராபரணதாரிகளாயிருந்து வருகிறார்கள்.

(4) பெண்கள்மூக்குக்குத்திபோடக்கூடாது சான்ரேர் குலத்தவர்கள் நாளதும் மூக்குக்குத்தி போடுகிறதில்லை.

(5) சான்ரேர் குலத்தவர்களுடைய குலதெய்வமாகிய சிவபிரான் ரிஷபவாகனராதலால் ரிஷபாரூடராய்ச் செல்லக்கூடாது.

(6) இடுப்பில் மறுத்தாறுப் பாய்ச்சாமல் குறுக்காக வஸ்திரங் கட்டக்கூடாது.

(7) சிவபிரானுடைய நெற்றிக்குறியானபடி

யால், நெற்றிகளில் திலதமாகிய சிந்தூரப் பொட்டிடக்கூடாது.

(8) சான்றோர்குலப் பெரியோர்களுடைய ஸ்திரீகள் வெளியேறாமல் அடக்கமாயிருந்து வருவதுமன்றி, அயலிடங்களுக்குப் போக வேண்டுவதாயிருக்குங் காலங்களில் மூடுபல்லக்குகளிற் போவார்களாதலால், சிவிகைதண்டிகைகள் பூர்வகாலமுதல் வைத்து உபயோகப்படுத்திவருகிறார்கள்.

(9) தென்பாண்டிநாட்டில் பஞ்சதிருவழுதி நாடாள்வார்கள் பூர்வகாலத்தில் இருந்து அரசுபுரிந்துவந்த கொற்கைப்பதி, ஆழ்வார் திருநகரி முதலான ஐந்து நகரங்களிருந்த நாட்டிற்கு மகாநாடு என்றும், மாநாடு என்றும், பஞ்சமால என்றும் பெயராம். பூர்வத்தில் தென்பாண்டி நாட்டுச் சான்றோர்குலத்து வழக்குகளுக்கு முடிவானதீர்ப்பு இந்த மகாநாட்டார்தீர்ப்பாம். நாளதுஞ் சான்றோர்குலத்துச் சிறுசிறு குடிவழக்குகள் அந்த மகாநாட்டு நாடாள்வார்களாகிய நாடாக்கள் பஞ்சாயத்தில் முடிவாகிவருகின்றது.

இத்தகைய பூர்வகுல மேன்மைகளையுடைய சான்றோர் குலத்தவர்களை ஜாதிசங்கிரகசார நூலாசிரியர் கள்வாணியர்களாகிய சௌண்டிகர்களுக்கு ஒப்பிட்டுப் பேசத்துணிந்தது அவர் மீது பெருங்குற்றமாம்.

மேலே மூன்றாவது விஷயத்திற் கூறியிருக்கிறபிரகாரம், சான்றோர்குலத்து விதவைகள் வெள்ளுடை புனைந்து நிராபரணதாரிகளாவது பூர்வ அரசகுலத்தவர்களுக்குண்டாயிருந்த யின்றியமையாத பூர்வ ஆசாரமாம். இதற்கு ஒரு திருட்டாந்தம் இங்ஙனம் எடுத்துரைப்போம்:

பூர்வகாலத்தில் அயோத்திமாநகரிற் செங்கோற்செலுத்திய தசரதமகாராசன் தன்தேவிமார்களி லொருத்தியாகிய கைகேயின் தந்திரத்திலகப்பட்டு ஸ்ரீராமரை வனத்திற் கோட்டிவிட்டபின்பு, தசரதராமர் தன்தேவி சீதையோடும் தன் தம்பி இலக்ஷுமணனோடும் தென்னாட்டில் தவஞ்செய்துகொண்டு வருகையில், தந்திர உபாயத்தால் இராவணன் சீதையைச் சிறையெடுத்துக் கொண்டு இரதாருடனாய்ச் செல்லுகையில், சீதையானவள் அலறியழுதுக் கொண்டு கேசாதிபாதம்வரை தான்பூண்டிருந்த ஆபரணங்களையெல்லாங் கழற்றி, ஒரு பொட்டணமாகக் கட்டித் தாழப்போட்டுவிட, அந்த ஆபரணங்களை சுக்கிரீவன் கண்டெடுத்து, தசரதராமன் முன்வைத்து, நடந்த காரியங்களைச் சொல்லவே, ஸ்ரீராமரானவர் மிகவுங் கிலேசித்துப் பிரலாபித்துப் புலம்பியபோது, இவ்வாறு சொல்லலுற்றார்:

கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம்,
கலன்காண்படலம், 19-வது கவி.

"விலங்கெழிற்றோளினாய் வினையினேனுயிர்
விலங்குவிற்கரத்தினு மிருக்கவேயவள்
கலன்கழித்தனளிது கற்புமேவிய [பார்."
பொலன்குழைத்தெரிவையர்புரிந்துளோர்கள்

இந்தக்கவியில் தசரதராமர் சொல்லுகிறார். "ஓ சுக்கிரீவா, எவற்றையும் முடிக்கவல்லவனாகிய நானிருக்க, என்கரத்தில் விசயகோதண்டமிருக்க, அவள் நிராபரணதாரியாயினள். கற்புநிறைந்த ஆபரணதாரிகளாகிய மங்கலக் கழுத்தியர்களும் நாயகன் உயிரோடிருக்கையில் இவ்வாறு செய்யத்துணிவார்? என்றான். இதினால் அரசர்குலப் பெண்கள் நாயகன் உயிரோடிருக்குந்தனையும் ஆபரணதாரிகளாயிருப்பதும் நாயகன் உயிர் நீங்கியபின் நிராபரணதாரிகளாவதும் பூர்வ அரசகுல ஆசாரவொழுக்கமென நன்றாய்த் துலங்குகின்றது." எனக் கூறியுள்ளது. இவ்வொழுக்கங்கள் சான்றோர்குலத்தார் பூர்வீகத்திலிருந்து வழங்க பழக்கமாக அனுசரிக்கப்பட்டுவந்தகுலவொழுக்கங்களென 1871ம் வருடத்தில் அச்சிட்ட "சான்றோர் மரபு" என்னும் நூலில், 73-வது பக்கத்திலும்; (Madras Mail, March. 7. 1873) 1873-ம் வருடம் மார்ச்சிமாதம், 7 தேதி வெளியான மதராஸ் மெயிலிலும்; 1874-ம் வருடத்தில் (Rev. S. Winpred. B. A.) வின்பிரட் ஐயர் அவர்களால் அச்சிட்ட "சான்றோர் மரபு காத்தல்" என்னும் நூலில், 213-வது பக்கத்திலும் விளக்கியிருக்கின்றன.

இவ்விரு வொழுக்கச் சட்டம் அதாவது வன்னியர்குல ஒழுக்கச் சட்டத்தையும், சான்றார் குலவொழுக்கச் சட்டத்தையும் அர்த்தநாரீசப் பள்ளி என்பார் நன்கோர்ந்து, இவ்விரு வகுப்பில் யார் க்ஷத்திரியர் என்பதை அறிந்துகொள்வாராக. இவற்றின் விரிவுரை அடுத்தப் பத்திரிகையிலிருந்து எழுதப்படும்.

(பத்திராதிபர்.)

பைபிள் மாமிச பட்சணம்.

(சா. வேதமுத்து, உபாத்தியாயர், சாட்சியாபுரம்.)

1. வினா:—தேவன் "நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும் உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக பசும்பூண்டுகளை உங்களுக்குத் தந்ததுபோல (ஆதி, 1:29) அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்" என்று (ஆதி. 9:3 இல்) (முதல்யுகத்திலிருந்து) தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் குடும்பத்தாருக்கு அனுமதியளித்தும் பின் மோசேத் தீர்க்கதரிசியின் காலத்தில் 'அவைகளிற் சிலவற்றை விலக்கவேண்டும்' என (லேவி.11: 1-47 இல்) தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் ஜாதியாருக்குக் கட்டளையிட்டிருப்பதால் மாமிசபட்சணம் செய்வது தெய்வசம்மதம் என விளங்கவில்லையா?

விடை:—நோவா பேழையிலிருந்து இறங்கியவுடன் மிருகங்களிலும், பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து தேவனுக்குத் தகன பலியிட்ட பிறகுதான், அவர் மாமிசம் சாப்பிடலாம் என்ற அனுமதியளித்தார் என்பது சந்தர்ப்பத்திலிருந்து விளங்குகிறது. (ஆதி.8-20 9:3) ஆதிமனிதருக்குத் தேவன் தோலுடைகளை உடுத்தி வித்தபோதும் (ஆதி.3:21) ஆபேல் மந்தையின் தலையீற்றுகளைப் படைத்தபோதும் (ஆதி. 4:4) இரத்தம் சிந்தும் பலியே நடந்திருக்க வேண்டுமென்று வேத வியாக்கியானிகளிற் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆதலால், இது மூன்றாந் தடவையான பலியாகக் கொள்ளவேண்டும்.

வேதாகமத்தில், நோவாவின் தகனபலிக்கு முன் இரண்டுதடவையே பலிசெலுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டிருந்தாலும். ஆபேலின் பலி உண்மையாய் இரத்தம் சிந்தும் பலியாயிருந்திருந்தால் அது முதல் நோவாவரை அநேகந்தடவை பலியிடப்பட்டிருக்க வேண்டும் என ஊகிக்க இடமுண்டு. பலி செலுத்தும் வகையைப்பற்றிய நிபந்தனையொன்றும் இவர்களுக்குச் சொல்லப்பட்டதாக வேதத்தில் காணப்படாவிட்டாலும், பலியின் மாமிசத்தைப் புசிக்கும் வழக்கம் ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்ததில்லையெனலாம். ஆனால், தகனபலியின் முறைப்படி மீந்த மாமிசத்தை (லேவி. 3:6-17.6)ச் சாப்பிடும் வழக்கம் இஸ்ர(லேவி. 22: 29-30) வேலருக்குள்ளிருந்தது. (உபா. 12: 27) ஆபேலின் பலி முதல், ஜனங்கள் தகனபலி முதலிய இரத்தம் சிந்தும் பலிகள் செலுத்தி வந்திருப்பார்களென்றால், பலியின்மேல் உள்ள விருப்பம் எப்படியோ, அப்படியே பலிசெலுத்தும் மாமிசத்தின் மேலும் விருப்பமிருந்திருக்கும். அந்த விருப்பம் நோவாவின் தலைமுறையில் அதிகமாயிருந்திருக்கும். நோவா ஜலப்பிரளத்துக்குப்பின் செலுத்தியது பலவகையான மிருகங்களும்; பறவைகளுமானதால் அந்த மாமிசத்தைப் புசிக்க நோவாவின் குடும்பத்தார் மிக இச்சைகொண்டிருப்பார்கள். ஏதேன் தோட்டத்தில் உள்ள நன்மை தீமை யறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டும் என்னும் ஆசை எப்படி, யாரால் உண்டாயிற்றோ, அப்படியே இந்த இச்சையும் உண்டாகி யிருக்கவேண்டும். கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துவது பக்தி விசுவாசத்துக்கடையாளமா யிருந்தாலும், அது சிலருக்குப் பெருமையையும், நன்மைக் கெதிர்பார்க்கும் உலக ஆசையையும் உண்டாக்கக்கூடியதா யிருக்கின்றது. தன்னையே (ரோமர் 12: 1 இல் சொல்லியபடி) ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லித் தேவ ஊழியத்துக்குப் புறப்படுகிறவர்களிற் பலர் தமக்குப் பலவிதத்திலும் நன்மையைத் தேடிக்கொண்டு, தங்கள் பலியிடப்படுவதற்குப் பதிலாகத் தங்கள் கடமையையே பலியிடக் கொடுக்கிறார்கள். இவ்விதமே பலியிட விரும்புகிறவர்களும், அதனால் ஓர் நன்மையடைய விரும்புகிறார்கள். உபாத்தியாயரும் உபதேசியாருமாய்த் தேவ ஊழியஞ் செய்வதைவிட குருவாக ஊழியஞ் செய்வதில் கடமையதிகமுளது. ஆனால், அதில் உலக நன்மையைக் காண விரும்பிப் பலர் அந்த ஊழியத்தைக் கேட்கின்றனர். பலி செலுத்துவதிலும் இவ்வித ஆசை முன்னரேயிருந்துவந்து இப்போது அதிக ஆவலுள்ளவர்களாய் பலிசெலுத்தியதால், மாமிச பட்சணம் புசிக்கும்படியான அனுமதியைக் கடவுள் மனிதருக்குக் கொடுத்திருக்கிறார்,

தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் குடும்பத்தார் பலி மாமிசத்தைச் சாப்பிட ஆசைகொண்டதுபோலவே, தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் ஜாதியார் பலி மாமிசத்துடன் பலிக்குப் புறம்பாகவும் அடித்துப் புசிக்க ஆசை

கொண்டார்கள். அவர்களுக்கு "...நீ இறைச்சி புசிக்க ஆசைகொண்டு, இறைச்சி புசிப்பேன் என்பாயானால், நீ உன் இஷ்டப்படி இறைச்சி புசிக்கலாம்." (உபா 12: 20) என அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது.

முதன் முதல் பலியிடப்படும் மாமிசத்தைப் புசிக்கும் ஆசையும், பின் அத்துடன் அதற்குப் புறம்பாக அடிக்கும் மாமிசத்தைப் புசிக்கும் ஆசையும் மனிதருக்குண்டானபடியால் இவ் விரண்டுக்கும் ஆண்டவர் இடங்கொடுத்தார். பின் மாமிசத்தைப் புசிக்கும் அளவில்லாத ஆசையுண்டானபடியால், அதைக் குறைக்கும்படி விதிவிலக்குகளைக் கொடுத்தார்.

ஆதலால், மாமிசபட்சண அனுமதியை, தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் குடும்பத்தாரின் மாமிசபட்சண ஆசையைத் திருப்திபண்ணவும், அதன் பின் அதைப் பற்றிய விதிவிலக்குகளை, தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் ஜாதியாரின் மிதமிஞ்சிய ஆசையைத் தடுக்கவும் கொடுக்கப்பட்டதே யொழிய, அவர் தம் பிரியத்துக்காகக் கொடுக்கப்பட்டதல்ல வென்றுணரவேண்டும். ஆனபடியால் மாமிச பட்சணம் தெய்வ சம்மதமானதல்ல. ஆனால், மனிதரின் இயற்கைக்குச் சற்று இடங்கொடுத்துப் பார்க்கிறார். மோசே தள்ளுதற் சீட்டால் மனைவியைத் தள்ளலாம். என்ற உத்தரவை யூதரின் இருதயக்கடினத்தால் கொடுத்தார் (மாற் 10: 5) என்று இயேசு சொன்னது எப்படிப் பொருத்தமானதோ அப்படியே, கடவுளும் ஜனங்களின் மனவாசையினிமித்தம் மாமிச பட்சணம் செய்ய இடங்கொடுத்தார் என்பதற்கும் பொருத்தமுள்ளது. ஆகையால், தள்ளுதற் சீட்டைக்கொடுத்துத் தள்ளுதல் மோசேக்குப் பிரியமில்லாதிருந்தும் யூதரின் மனக் கடினத்தினிமித்தம் இடங்கொடுத்தார் என்பதுபோல, மாமிச பட்சணம் செய்வது தேவனுக்குப் பிரியமில்லாதிருந்தும் மனிதரின் ஆசைக்கு இடங்கொடுத்தார் என்று உணரவேண்டும். ஆகையால், மாமிச பட்சணம் தெய்வ சம்மதமானதல்ல.

வினா:—கடவுள், மாமிச பட்சணம் செய்ய அனுமதியளிக்க நாம் அதை விலக்கினால் அவருடைய நோக்கத்தைவியர்த்தமாக்குகிறவர்களாகமாட்டோமா?

விடை:—மனிதர் கட்டாயம் மாமிச பட்சணம் செய்ய வேண்டுமென்பது அவர் நோக்கமல்ல. மாமிச பட்சண விருப்பத்தை நோவாவின் குடும்பத்தாரிடம் குறிப்பாய்க் கண்டு இவ்வனுமதி யளித்திருக்கக்கூடும். அவர்கள் விரும்பாதிருந்தால் இவ்வனுமதி யளித்திருக்கமாட்டார். ஆதலால், மாமிச பட்சணஞ் செய்வது அவர் நோக்கத்தை நிறைவேற்றுவதுமல்ல, செய்யாதது அவர் நோக்கத்தை வியர்த்தமாக்குகிறதுமல்ல வென்றுணரவேண்டும்.

மேலும், ஆதாமைக் கிரகஸ்தனாக அதாவது குடும்ப வாழ்க்கை யுள்ளவனாகவே இயல்பில் உண்டாக்கியிருப்பதைக் கவனிக்கும்போது—மனிதர் யாவரும் விவாகஞ்செய்து குடும்பவாழ்க்கை யுள்ளவர்களாகவே யிருக்கவேண்டுமென்பது அவருடைய நோக்கம் என்பது பிரத்தியக்ஷமா யிருக்கிறது. அப்படியிருந்தும், 'அவருடைய நோக்கத்தை முற்றிலும் நிறைவேற்ற வந்தேன்' என்று சொல்லிய இயேசுக் கிறிஸ்துவும் கூட இந்த (விவாக விஷயமான) நோக்கத்தை நிறைவேற்றவில்லை. அப்படியே, கிறிஸ்துவைப் பின்பற்றிய சேஷரிலும் அநேகர் விவாகஞ் செய்யாமலே சர்வ கடவுள் சித்தத்தை நிறைவேற்றிவிட்டதாகக் கூறுகிறார். விவாகஞ்செய்வது கடவுளின் நிச்சயமான நோக்கமா யிருந்தும், அவருடைய நோக்கத்துக்கு மாறாக விவாகஞ் செய்யாமல் பரிசுத்த ஜீவியஞ் செய்தவர்களை எவ்விதத்திலும் வெறுக்கவில்லை யென்பது வேதவசனங்களால் நிச்சயமாகிறது.

ஆதலால், முழுநோக்கமுள்ள விவாக விஷயத்தை மீறினவர்களே அவர் நோக்கத்தை வியர்த்தமாக்காதவர்களாய்க் காணப்படும்போது, மனிதரின் விருப்பத்தால் இணங்கி அனுமதியளிக்கப்பட்ட மாமிசபட்சண வனுஷ்டிப்பை மீறுகிறவர்கள் எப்படி அவர் நோக்கத்தை வியர்த்த மாக்குகிறவர்களாய்க் காணக்கூடும்? ஆகையால் மாமிச பட்சணத்தை விலக்குவது அவர் நோக்கத்தை வியர்த்த மாக்குவதாக மாட்டாதென்றறியவேண்டும்.

வினா:—மாமிச பட்சணம் செய்ய வாரம்பித்தது முதல் உலகத்தில் எந்தவிதமான தீமை யாரம்பித்து நடந்துவருகிறது?

விடை:—மனிதர் மாமிச பட்சணம் செய்ய வாரம்பித்தது முதற்கொண் மிருகங்களிற் சிலவும், பறவைகளிற் சிலவும் மாமிச பட்சணம் செய்யவும் ஒருவகை வற்றிற் சிலவிஷத்தை யடையவும் ஏற்பட்டிருக்கிறது. மனிதரையும் மற்ற ஜீவஜந்துக்களையும் சில துஷ்டப் பிராணிகள் கொல்லவும் சில விஷ ஜந்துக்கள் விஷத் தீண்டல் செய்யவும் ஏற்பட்டபடியால் உலகத்தில் மிருக உபத்திரவம் உண்டாயிருக்கிறது. 'இந்தியாவில் வருஷம் ஒன்றுக்குச் சுமார் இருபதினாயிரம் (20000) பேர் பாம்பு கடியினால் மரிக்கிறார்கள்' என P. B. L. No 198—'பாம்புகடி' என்ற துண்டுப் பிரசுரத்தில் காட்டியிருக்கிறது. தேள் கொட்டால் எத்தனையோ பேர் மிகுந்த உபத்திரவப்படுகிறார்கள். இவையெல்லாம் மனிதர் மாமிசம் சாப்பிட ஆரம்பித்தது முதல் உண்டாயினவே.

தவிர, உலகத்தில் நடந்த முதல் மனுஷகொலை, மிருகங்களைப் பலியிட்ட வழக்கத்திலிருந்துதான்

உண்டாகியிருக்க வேண்டும். முதல் மநுஷனாகிய ஆதாமின் மக்களின் மூத்தவனாகிய காயீன், தாவரவர்க்கக் கனிகளைக் கடவுளுக்குக் காணிக்கையாகப் படைக்க, இளையவனாகிய ஆபேல் மந்தையின் தலையீற்றுகளை இரத்தஞ் சிந்தும் பலியாகப் படைத்தான். காயீன் காணிக்கை அங்கீகரிக்கப்படாமல் போக, ஆபேல் காணிக்கை அங்கீகரிக்கப் பட்டபடியால், ஆபேல் விஷயமாய்க் காயீனுக்குப் பொறாமையுண்டாயிற்று [ஆதி. 4: 3-6] ஆபேலுக்குத் தீங்கிழைக்கக் காயீனுக்கு எண்ணமுண்டானபோது செய்வதின்னதென்று தெரியவில்லை. ஆனால், ஆபேல் மந்தையின் தலையீற்றுகளைப் பலியிட்டதில் அம்மிருகங்கள் பிணமாய்ப்போய் ஒன்றும் செய்யக்கூடாமல் செயலற்றுக் கிடந்ததைக் காயீன்கண்டு, ஆபேலையும் அந்தவிதம் செய்துவிடலாம் எனத் தீர்மானித்திருப்பான். அப்படியே செய்துவிட்டதாகவும் (ஆதி 4: 8-இல் வாசிக்கிறோம். ஆனபடியால் மநுஷகொலை, மிருககொலையிலிருந்து வந்ததேயென் றுணரவேண்டும்.

கடவுள் எல்லா ஜீவஜந்துக்களையும் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமற் படைத்திருக்க, அவைகள் ஒன்றுக்கொன்று விரோதஞ் செய்யத் தலைப்பட்டபடியால் ஒவ்வொன்றுக்கும் தற்காப்புக்காகச் சில ஏதுக்கள் இயற்கையிலேயே உண்டாயின. சிங்கம், புலி, கரடி முதலியவைகள் மனிதரின் கொடுமையினின்று மீட்கப்படவே அவைகளுக்கு வலிமையுண்டாயின. விஷஜந்துக்களுக்கு விஷமும் அப்படியே உண்டாக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஏதுக்களைக் காரணமின்றியும், விரோதிகளல்லாத ஜீவஜந்துக்களிடத்தும் பிரயோகிப்பது மிகவும் தோஷம். மனிதர் மாமிசம் சாப்பிடுவதற்காகப் பிராணிகளைக்கொல்லும் வழக்கம் உண்டானதிலிருந்துதான் பலவித தீமைகள் உண்டாகிவிட்டன. ஆகையால், உலகத்தில் பிராணிகளுள் ஒன்றுக்கொன்று விரோதம் ஏற்பட்டது. கொலையாலும், புலாலுண்ணுவதாலுமே யென்றுணர்ந்து, கொல்லாமை, புலாலுண்ணாமையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

வினா:—மாமிச பட்சணம் செய்யப்போவதால், பல தீங்குகளுண்டாகுமென, தேவன் குறிப்பாகவாவது வெளிப்படையாகவாவது வெளியிட்டிருக்கிறாரா?

விடை:—தேவன் முதல் யுகத்தின் முதல் குடும்பத்தாரை ஆசீர்வதித்து, அவர்களுக்கு அதிகாரம் தரும்போது "...நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள்..." (ஆதி 1: 28) என்று சொல்லியிருக்க, இரண்டாம் யுகத்தின் முதல் குடும்பத்தாரை ஆசீர்வதித்து அவர்களுக்கு அதிகாரந் தரும்போது, "...நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள். உங்களைப்பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும்; பூமியில் நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும் உங்களுக்குக் கையளிக்கப்பட்டன." (ஆதி 9: 1-2) என்று சொல்லியிருப்பதால் முதல் யுகநிலைமைக்கும், இரண்டாம் யுகநிலைமைக்கும் வித்தியாச முண்டென்பது தெளிவாகிறது.

(தொடரும்.)

கு. அர்த்தநாரீசவர்மாவுக்கு எச்சரிக்கை கடிதம்.

(1925௵ ஏப்ரல்௴ 27௳ நாடார்குல மித்திரனில் வெளியானது.)

——(o)——

சென்னை "க்ஷத்திரியன்" பத்திராதிபரவர்களுக்கு:—

பரமன் குறிச்சி கிராமம் மானாட்டிலிருக்கும் குப்பான் பிள்ளை யென்ற சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் குமாரர் சங்கரம் பிள்ளை யென்ற சங்கரசுப்பிரமணிய பிள்ளை எழுதிக் கொண்ட கடிதம் என்னவென்றால்:—

(1) காயாமொழி ஆதித்த நாடார்களைப் பற்றி அவதூறு பேசி மானாடு கு. சங்கரன் பிள்ளை யென்று கையொப்பமிட்ட கடிதமொன்று க்ஷத்திரியனில் 1925௵ ஏப்ரல்௴ 11-ம் தேதியில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. மானாட்டில் கு. சங்கரன் பிள்ளை யென்று என்னைத் தவிர வேறு ஒருவரும் கிடையாது. என் சொந்தப் பெயர் சங்கரசுப்பிரமணிய பிள்ளை. அதைச் சுருக்கி சங்கரன் பிள்ளை யென்று வழங்கி வருகிறது. என் தகப்பனார் சொந்தப் பெயர் சிவ சுப்பிரமணிய பிள்ளை யென்று பட்டா முதலியது இருந்த போதிலும் குப்பான் பிள்ளை யென்று வழங்கி வருகின்றது.

(2) கு. சங்கரன் பிள்ளை யென்ற பெயருக்குப் பாத்தியதை உடையவர்கள் மானாட்டில் மற்ற எவரும் இல்லை நான் அப்படிப்பட்ட கடிதம் எழுதவு மில்லை. இன்னொருவரைச்

கொண்டு கடிதம் எழுதச் சொல்லவுமில்லை.

(3) தங்களுடைய அடுத்த பத்திரிகையில் (1) அக்கடிதம் சிருஷ்டியினைக் கடிதம் இல்லையென்று சுருப்படுத்த வேண்டும். (2) இல்லையானல் ஷை கடிதத்தைத் தப்பென்று மறுபிரசித்தம் செய்யவேண்டும். இரண்டும் தவறினல்:—

(4) ஷை விதமாக அவதூறன சிருஷ்டியினைக் கடிதம் ஒன்றைத் தாங்கள் பிரசுரித்ததற்காக நானும் சாயாமொழி ஆதித்த நாடார்களும் தங்கள் பேரில் மான நஷ்டத்திற்காக வியாஜ்ஜியம் தொடங்குவதாக உத்தேசித்திருக்கிறோம் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன். இந்தக் கடிதத்தைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிவ. சங்கரசுப்பிரமணியப்பிள்ளை,
மானூர்.

—o—

கைம்பெண்களுக்கு மறுமணம் அவைதிகமென்பது.

(திருவேங்கடம், திருமலைசாஸ்திரி.)

ஐய, இத்தேசத்தில் நம்மவர் அநுஷ்டித்து வரும் விவாககன்மம் மற்ற தேசத்தவர் கொண்டது போல இம்மைப்பயனை மட்டும் கருதியதல்ல. மற்று மறுமையிலும் சில பயன்களைக்கருதியே அனுஷ்டிக்கப்படுவது. இம்மையிலும் விவாகத்தின்பயன் ஆரியருக்கு இன்பமட்டேயல்ல. அனேக நன்மைகள் விவாகத்தால் சாதிக்கற்பாலன வென்பதுண்மை. "காற்றினல் உலகத்துள்ள எல்லா ஜந்துக்களும் பிழைப்பதுபோல இல்லறத்தைத் தழுவியே சர்வாச்சிரமங்களும் பிழைக்கின்றன" என மநு கூறியவாறு சர்வகன்மங்களையும் குற்றமற நடத்தக்கூடியவாற்றல் இல்லறத்தவர்க்கே என்பது திண்ணம். தைவம், பைதிருகம், ஆர்ஷம் முதலிய கன்மங்கள் எதுவும் இல்லறத்தவனுற் செய்யப்படுகின்றன. ஆதலாற்றன் காளிதாஸகவியும் "உனது ஆச்சிரமம் சர்வோபகாரங்களையும் செய்யும் பேராற்றலுடையதென்றார். இவ்வில்லறம் குறைவற நிறைவேறுதல் சிரத்தையாலும் நற்றுணைவியாலுமன்றி யமையாது. ஆதலாற்றன் ஆரியர் பெண்டிரை இல்லறத்துணைவி யென்பர்.

அவ்வில்லறம் பூர்த்தியெய்தவே திருமணம் புரிதல் ஆரியர்க்கு அத்திருமணச் சம்ஸ்காரம் பெற்ற தருமபத்தினியிடம் பிறக்கும் குழந்தைகள் தருமப்பிரஜைகளே. யாம் கேவலவின்பத்திற்கெனப் பெண்களை மணப்பதில்லை. ஒரு தருமத்தின் பொருட்டே ஆயின் ஒரு பெண்ணை ஒருமுறை ஒருவன் தருமத்திற்காகக் கேட்டான். அதற்கிசைந்து அப்பெண்ணின் தகப்பனும் அக்கன்னியைக் கணவனுக்களித்திட்டான். அவ்விருவரும் கூடிச் சில தருமங்களைச் செய்யவும் செய்தனர். இனித் தெய்வவசத்தால் அம்மணவாளன் இறந்தால் அப்பெண்களை மற்றவன் மணப்பானேன்? ஒருவனில்லறத்துணையாய் நின்று அவன் அநுபவித்தபொருளாய் எஞ்சியதைக்கொண்டு மற்றவன் தன்னில்லறம் விளங்கச்செய்வது உசிதமா? எச்சிலைத் தின்பதுபோலல்லவோ அம்மறுமணத் தம்பதிகள் செய்திடும் கிரியையாகும். இனி இவ்வுச்சிட்ட தம்பதிகள் செய்யும் கன்மமா தேவர்களுக்கும் பிதுருக்களுக்கும் மற்றவர்க்கும் பிரீதியைக்கொடுக்கும். இங்கு இப்பெருந்தீச்செயல் எமது குலத்தைக் கெடுக்கும் என்றே இப்பெரியோர் ஒழித்திட்டார். இனி பெரியோர் சென்ற வழியை மாற்றிப் புதிய வழி ஒன்று கண்டு அவ்வழி செல்வோமானல் அந்தோ! "எனது புருடன் எனக்குப்போதுமானவனல்ல; எனக்குத்தக்க அழகனல்ல; எனக்கு அவனிடம் விருப்பமில்லை; அவனுக்கு வயது முதிர்ந்தது; அவனுக்கு ரோகம் வந்தது" என்பதாதி பல காரணங்களைக்கொண்டு ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொருவராய் ஒவ்வொரு கணவனைப் பார்க்கவேண்டி நேரிடவும் வரும். அம்மம்ம! இதினும் மேலாய் ஆரியர் மதஆசாரத்தைக்கெடுத்திட வேறு வேண்டியது யாதாது? நம்மவரே நம்முது நூல்களைக் கருதவில்லையே! இவருக்குண்மை புலப்படவில்லைப்

படி? இவர் நற்கதி யடைவதுதான் எவ்விதம்? எக்காலம் எம்மிடம் சதாசாரம் தங்குமோ அறியேம்! மேலும் "ஒருமுறையே கன்னியைக் கொடுப்பது மேலோர் இயல்" என மனு மொழிந்தார். இருமுறை கொடுத்தல் மேலோர் செயலன்றி கீழோரியலாக முடிய, அது அவைதிகத் தீச்செயலாதலின் அதில்மேலோர் அபிப்பிராயம் எவ்விதத்துஞ் சொல்லாததறிக. மேல் "விதந்வகர், யதிகள், பிரமசாரிகள், இவர்களுக்குத் தாம்பூலம் கோமாம்ஸம் போலொத்தது" என்றும் "விதவை கட்டிலில் படுத்தால் பதியை நல்லுலகத்திருந்து நழுவச்செய்வாள்" என்றும் "பல்லக்குமுதலிய தேறும் விதவை நரகம் பெறுவாள்" என்றும் "தலைமயிர் வளர்த்தல் உடம்பு மினுக்குதல் எண்ணையிட்டுக்கொள்ளல் கண்ணாடி காண்டல் இவைகள் விதவைக்குக்கூடா" தென்றும் உள்ளபல வசனங்கள் விதவைகளின் மறுமணத்தை மறுக்கத் தடையென்னை? மேற்கண்ட வசனங்களால் விதவைகளுக்குச் சந்தனதாம்பூலாதிகளே கூடாதெனப் பெறப்படுதலால் அவர்கள் எப்படிக் கணவரைக்கூடி விளையாடி குழந்தைகளையும் பெற்றெடுப்பது பிரமாண சம்மதமாகும்? 'புத்' என்னும் நரகம் தகப்பனுக்கு வாராது காப்பாற்றுவது "புத்திரன்" எனுஞ் சொல்லுக்குப் பொருள். இனி புனர்விவாகத்தால் பிறக்கும் குழந்தை புத்துமாத்திரமல்ல; மற்றைய எல்லா நரகங்களையும் தகப்பனுக் களிப்பானாதலால் இவன் வெகுவாய் அவனிலும் மேலானவனே. இங்குண்மையிது.— "எவர் பாவத்தினின்று பயந்து அதை விலக்கிவிடுவார் அவரே ஆரியர்" என ஆரியச் சொற்பொருள். அச்சொல்லோ நம்மவர்க்கே கூறியதென இன்னும் வேதாதிப் பிரமாணங்களால் நிரூபிக்கலாம். இப்பெயர் ஒன்றே நம்மவர்க்குப்பெரும் பூஷணம் எனலும் தகும். நம்மவர் எப்பொழுதும் பாவத்திற் பயமுள்ளார் என்றும் இன்றைக்கும் மற்ற தேசத்தவர்களைப் போல இப்பாவத்தொழிலை இத்தேசத்தார் செய்வதில்லை யென்பதும் எல்லோருமறிந்த விஷயம்.

பெண் கல்வி.

(K. G. வெங்கடாசலம், கும்பகோணம்.)

அகண்டாகண்ட சதானந்த அருட்பெருஞ்ஜோதியா மெம்பிரான் கருணை கடலான நித்திய கலியாண பகவனது திருவிளையாட்டினது செயலாலுண்டான இப்பிரபஞ்சத்திற் றோன்றிய 84 லட்ச ஜீவராசிகளில் முதன்மை பெற்றதும் பகுத்தறிவெனும் பாக்கிய முடைத்தானதும் பெறுதற்கரியதுமான இம்மானிட பிறவி யென்ப துலகறிந்தவிஷயம். இஃதை கருதியே பகவனது மெய்த்தொண்டர்களில் ஒருவரான ஸ்ரீலஸ்ரீ தாயுமானவரவர்களும் "எண்ணரிய பிறவிதனிலும் மானிடப்பிறவிதான் யாதினுமரிது காண்" எனவும், "அரிதரிது மானிடராய் பிறப்ப தரிது" என மூதுரை பிராட்டியாரும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். இக்க சகடை காலென மாறி மாறி சுழலும் இப்பிறவிக் கடேறுமாறு பகுத்தறிவெனும் மெய்த்தோணியி லேறி மெய்ஞ்ஞானமெனும் சமுத்திரத்திலே பொய் கொலை களவு கட்காமம் முதலான கொடுங்காற்றிலே யகப்படாது அக்கரையேறி அருந்தவிய அமுத சஞ்சீவி யுண்பதற்கு இச்சிற்றுயிர்க்கு கல்வி ஒன்றையே ஆதார மென்பதற்கையமுளதோ? இல்லை இல்லை. "அறம் பொருளின்பம் வீடடைதல் நூல்பயனே" எனும் நன்னூலாசிரிய பவணந்தி முனிவரது செஞ்சொற் றீபசுடரே இதனது உண்மையை நன்குவிளக்கும் இஃதை கடைபிடித்தோர்க்கே ஜெனன மரண மனுக்கு மார்க்கம் கிடைக்கும் எனும் சான்றோர்களினது நிதற்ற கொள்கையிலே சிறிது மேற்கொண்டொழுகும் சிற்றறிவினனாகி நாயேன் தற்போது "பெண்கல்வி" யெனும் ஒப்பற்ற விஷயத்தை நமது க்ஷத்திரிய வம்சத்தின் முன்னேற்றத்

திற்கு தன் உடல் பொருளாவி இம்மூன்றையும் தருணமாக பாவித்து மாதமுறை வெளியேறி அன்பர்களுக் கன்பான விஷயத்தை சுருக்கச்சொல்லி விளங்கச்செய்யும் நம் "க்ஷத்திரியமித்திரனில் பிரசுரிக்க முன்வந்துள்ளேன்.

"எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும்" ஔவை பிராட்டியாரது உத்திரவும் "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றோரோடேனையவர்" எனவே திருவள்ளுவரது தமிழ்வேதக்கட்டளையன்றோ? இதனது இன்பத்தை இக்கலியுகத்திலே நம் ஆடவர்கள்மட்டு மெடுத்துக்கொண்டு மயவருசனர்களெனும் மகுடத்தை தாங்களு மரியாது சூடி கொள்ளுகின்றனர். அந்தோ! அப்பகவனுக்கும் அவரது தொண்டர்களுக்கும் செல்வ கல்விவாணர்களுக்கும் இவ்வித பக்ஷபாதமுண்டோ? அல்லது அவர்களது நூல்களேனும் நவலுகிறதோ? கிடையவே கிடையா. அக்கடவுள் யாவருக்கும் பொதுவானவர் என்பதற்கு சூரிய சந்திரர்களும் அவரது தொண்டர்களும் அவ்வண்ணமென அவர்களால் உண்டாக்கிய வாகடம் முதலிய சாஸ்திரங்களும் கல்வி செல்வர்களு மவ்வாறென அவர் தம் புண்ணிய நூல்களுமே சாதலாகமலமல்லவோ? அம்மூவரும் ஆணென்றும் பெண்ணென்றும் கீழோரென்றும் மேலோரென்றும் பார்க்காது தமது நூல்களை ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் பிரித்துரைக்காதிருக்க இக்காலத்திய நம் ஆடவர்கள் மட்டும் முன்னோர்களது உத்திரவுக்கு விரோதமாய் கல்வியெனும் செல்வத்தை தாங்கள்மட்டும் அபகரித்துக்கொள்வது எதற்காகவோ? இப்படி செய்வதனு லுண்டாகும் அபகீர்த்தியையும் பெண்கள் வருந்துவதனால் உண்டாகும் பாபகன்மையையும் நம் ஆடவர்கள் ஏற்றுகொள்வதை அறிந்தாரில்லை.

இவர்களே அதை அனுபவிக்கட்டுமென்றும் இவர்கள் ஆராயும் நீதிசாஸ்திரத்தின் வழியாக நடக்கிறார்களில்லை. அஃதென்னவெனில்:—

"துர்ச்சனரும் பாம்பும் துலைசெக்கினும் பாம்பு
துர்ச்சனரை யொவ்வா—துர்ச்சன
ரெந்தவிதத்தாலு மிணங்காரே பாம்புமணி
மந்திரத்தாலே யடங்கும்"

எனும் மொழிக்கிணங்க துர்ச்சனரது தெரிசனத்தாலும் அவர்களது கூட்டுறவாலும் கூறுதற்கரிதான பாதகங்கள் சம்பவிக்கு மென்பதை மேற்கூறிய நீதிவெண்பா போதிக்கிறதன்றோ? இதனையவர்கள் ஆழ்ந்தகருத்தோடு யோசித்திருப்பவர்களாயின் தங்கருப்பையில் மாதமொருபத்தும் வைத்து பெற்றதாயும் தன்னுடன் பிறந்த சகோதரிகளும் தான் கொள்வதோ அல்லது கொண்டதோவாகிய மனைவியும் கல்வியறிவில்லாத துற்குணர்களாயிற்றே அவர்களுடன் சதாகாலமும் பழகி வருவதினால் பாதகமாயிற்றே. சேர்க்கைவாசனையே நன்மையும் தீமையும் தருவதாயிற்றே என்பதை யுணர்ந்து நாம் கெட்டதோடு இருக்கட்டும். பெருமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல் லபிற என பொய்யாமொழியிலுயர்த்தி கூறப்படும். புத்திரபாக்கிய முற்றோர்களாயின் அவர்களேனும் நன்மார்க்கத்திலே நின்றொழுக மார்க்கம் தேடினார்களுமில்லை. தேடுவார்களுமில்லை. அவர்கள்தான் அப்படியென்றால் அநுதினமும் தன்பாஷையோ பிறபாஷையோ வரைந்துள்ள புஸ்தகமும் கையுமாக பள்ளிக்கூடம் செல்லும் வாலிப நண்பர்களாவது தங்களது சகோதரிகளையும் கல்வி பயிற்சி செய்யவேண்டுமென கேட்டாருமில்லை. கேட்போருமில்லை. இவைகளினாலேயே இவர்கள் கற்றும் கல்லாதவர்கள் என்று யாரும் சொல்லாமலே எளிதில் விளங்குகிறதன்றோ? இதுநிற்க. "இல்லற மல்லது நல்லற மல்ல" எனும் முதுரை கிழவியினது மதுர சொல்லை ஆசிரியர் மூலமாய் உபதேசிக்கப்பட்டும் அதனை அறவேமறந்து விடுகின்றனர். இல்லறமெனும் ஓர் பெரிய ரதத்தை சதிபதி எனும் இரண்டு புரவியை கட்டி அதற்கு சாஸ்திர கடிவாளமிட்டு பகுத்தறிவெனும் மெய்பாகன் ஓட்டவேண்டியதன்றோ? ஆதலின் அவ்விரண்டு புரவிகளில் ஸாஸ்த்திர கடிவாளமில்லாத பெண் புரவி கட்டுக்கிணங்காது பாகனுக்கடங்காது "மனம்போன போக்கெல்லாம் போகவேண்

டாம்" என்பதை மறந்து செல்ல ஆரம்பித்தால் அவ்வில்லறமெனும் ஒப்பற்ற அற்புதாதம் அலைகுலைந்து விடுமே அதனால் தீராதபாபமன்றோ தொடரும் என்பதை மறந்து முற்காலத்திய நாகரீகத்திற்கு முற்றும் விரோதமாய் இக்காலத்திய நாகரீகத்திற் சிறந்ததுவாய் இருந்தால் பார்த்த உடனே பரவசப்பட்டு அவர்கள் விஷயமாய் எவ்வளவு சிலவு நேரிடினும் பொருட்படுத்தாது விவாகம் முடித்து கொள்ளுகின்றனர். இவர்கள் அரியாமையை என்னென்றுசொல்வது? பெண்ணில் பெருந்தகையாவுள கற்பெனும் திண்மையுண்டாக பெரின் (குறள்) எனும் சொல்லுக்கு முற்றும் பொருந்தாது. தான் கொண்ட பெண்டானவள் கலைமகளது சேர்க்கை இல்லாதவள் கல்வியெனு மமுதபான முண்ணாதவள் என வறிந்து "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்" ரென்பதற்கிசைந்து தாங்களாவது அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் தொழிலை மேற்கொண்டாருமில்லை. அம்மட்டோ? "தெய்வம் தொழா அள்கொழுனற் றொழுதெழுவாள் பெய்யென பெய்யுமழை" (குறள்) எனும் சொல் அப்பெண்மனது மணமாகிய மரத்தில் கொடும் செய்கைகளாகிய கிளைகளை அறுத்துத் தள்ளும். அதனாலேயே அம்மகடுகளுக்கு தங்களது புருஷர்களிடத்தே பக்திதோன்றும் அதனாலேயே இல்லறமானது அல்லலின்றி நடைபெறும் அதனாலேயே மூவுலகமுங்கொண்டாடும்புகழும் வந்து சேரும் அதனாலேயே எக்காலமும் அழிவில்லாது "ஈதலறந்தீவினை விட்டீட்டல் பொருளெஞ்ஞான்றும், காதலிருவர்கருத்தொருமித்தாதரவு பட்டதேயின்பம் பானை நினைந்திம்மூன்று விட்டதேபேரின்ப வீடு" (காலடியார்) எனும் பேரானந்தத்திடையே வீற்றிருக்க நேரும் இவை யாவற்றிற்கும் கல்வியே சிறந்த ஆதாரம் என நம்மாடவர் அறிகிறார்களில்லை. அறிந்தாலும் அனுஷ்டிக்காது விடுகின்றார்கள். இதுதான் இவர்கள் படித்தறியும் பற்பல சாஸ்திரங்களை விர்த்திசெய்யும் மார்க்கம்போலும்! அந்தோ! அக்கடவுளால் உலகத்தினருக்கு பொதுவாய் அளிக்கப்பட்ட தமிழ் செல்வத்தை தாங்கள்மட்டும் அபகரித்துக்கொள்வதால் தெய்வதுரோகமும் ஆசிரியர் கூரிய முறைகளை மீறி நடப்பதினால் குருத்துரோகமும் தொண்டர்கள் உண்டாக்கிய ஒப்பற்றகாவியங்களின் இன்பத்தை பெண்கள் அறியும் மார்க்கத்தையாவது அல்லது தாங்களேனும் போதிக்காதிருப்பதினால் தொண்டர்கள் துரோகமும் உண்டாவதை நினைந்தொழுகி இனிமேலேனும் இவ்வித அறியாமையை முற்றும் ஒழிக்க முயலுவார்களென நம்புகின்றேன். சுபம்!

சேலம் க்ஷத்திரியனில் ஓர் கடிதம்.

(காயாமொழி S. A. பகவதி ஆதித்தன் பகருகிறார்.)

11-4-25-ல் வெளியான க்ஷத்திரியனில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அந்தக் கடிதத்தை மானுட்டில் சங்கரன் பிள்ளையென வழங்கப்படுபவர் தான் எழுதவில்லையென்று 18-4-25-ல் எழுதியனுப்பிய கடிதம் 27-4-25-ல் வெளியான நாடார்குல மித்திரனில் மட்டும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியன் ஆசிரியர் மிஸ்டர் வர்மா கௌரவ மௌனஞ் சாதிக்கிறார். காலம் கடத்துவதற்கு முன்னால் க்ஷத்திரியன் தகுந்த ஜவாபு சொல்லவில்லையானால் மானுட்டுப் பிள்ளையும் காயாமொழி நட்டாத்தி நாடார்களும் க்ஷத்திரியன்மீது மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். அது சம்பந்தமாக 20-4-25-ல் யாம் எழுதிய சமாதானக் கடிதம் பின்வருமாறு:—

"ஓர் உண்மைக் கடிதம்"

1925-ம் வருடம் ஏப்ரல் மாதம் 11-ம் தேதி வெளியான க்ஷத்திரியன் மூன்றும் பக்கத்தில் ஓர் கடிதம் வெளியாகியிருக்கிறது.

அந்தக் கடிதத்தில் கூறியவாறு விருதுப்பட்டி பேட்டை வியாஜ்யத்தில் ஒரு செட்டியார் சொல்லியிருப்பது ஒருபுறமிருக்கட்டும்.

ஒரு கக்ஷியில்நின்று ஸ்டேட்மெண்ட்கொடுத்த அந்த செட்டியாரின் கூற்றுகளால் ஓர் உயர் குலத்தாரின் பூர்வோத்திரத்தை மாறுபாடாக நிர்ணிப்பது எவ்வளவு மதியீனம்!

அந்த வியாஜ்ஜியத்தில் ஜட்ஜி கடைசியாக முடிவு சொல்லிய தீர்ப்பில் ஆதித்த நாடார்களின் குல வுண்மை தனக்கு நேரில் தெரியுமென்றும் செட்டியார்கொடுத்திருக்கும் ஸ்டேட்மெண்ட் கட்டுரையாக விருக்கிறதென்றும் விளக்கமாக எழுதியிருக்கிறார்.

(ஒருசமயம் கடவுமானால் அந்தத் தீர்ப்பின் நகலைப் பலரறிய பத்திரிகையில் வெளிப்படுத்துகிறேன்.)

சுமார் 85 வருடத்துக்கு முன்னால் சென்னை சதுர்வேத சித்தாந்த சபையால் வெளியாக்கப்பட்டிருக்கும் அம்மணியம் யோச்சாமீடம் என்னும் நூலின் சிறப்புப்பாயிரத்தில் புகலைத் தமிழ்புலவர் பொன்னுசாமி முதலியாரால் செய்யப்பட்டிருக்கும்நேரிசை ஆசிரியப்பாவில்-

காந்தமா விருடிதன் காண்டகு கோத்திர
ஈழந் திறைகொளி இருநிலத் திசைபெற
வாழுஞ் சான்றார் வண்குலத் தலைவன்

....

இராம கிருட்டின முத்தாதித்த நாடான்

என்று கண்டிருப்பதிலும் தாழ்வைத் தெரிவிக்கக் கூடிய விஷயமில்லை. இதுவும் ஆதித்த நாடார்களின் உயர்வையே தெரிவிக்கிறது.

காயாமொழி கட்டாத்தி நாடார்கள் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிக்கு வேண்டிய நகைகள் செய்து வைத் திருக்கிறார்கள். அவைகள் விசேஷகாலங்களில் சுவாமிக்கு அணியப்படுகிறது. அந்த நகைகளில் கு. சங்கரன் பிள்ளை கூறியபடி முறுக்குத்தடி அரிவாள் சான்நார் முதலிய உருவங்கள் கிடையாது. அது சுத்தப் பொய்யாயிருக்கிறது. பிறக,

அந்தக் கடிதத்தின் கடைசியில் கையொப்பம் வைக்கப்பட்டதாய் வெளிப்பட்டிருக்கும் கு. சங்கரன் பிள்ளை யாரெனத் தெரியவில்லை.

மாவூடு என்னும் ஊர் காயாமொழிக்குத் தென்மேற்கில் இரண்டு மைல் தூரத்திலுள்ளது. அங்கு கு. சங்கரன் பிள்ளை என்பவர் ஒருவருமில்லை. சங்கரன் பிள்ளை என்ற பெயருள்ளவரே ஒருவர்தா னிருக்கிறார். அவர் சி. சங்கரன் பிள்ளையாவர் சி. சங்கரன் பிள்ளையும் க்ஷத்திரியனில் வெளியாகி யிருக்கிற அந்தக் கடிதத்தைத் தான் எழுதவில்லை யென்கிறார். அம்மட்டு மில்லாமல் தான் அதை எழுத வில்லையென்று பலரறியும்படியாக ஏப்பிரல்மீ 18உ நாடார்குலமித்திரன் க்ஷத்திரியன் ஆகிய இருதரப் பத்திரிகைகளுக்கும் கடிதங்கள் அனுப்பி யிருக்கிறார். விஷயம் இப்படி யிருப்பதால் கு. சங்கரன் பிள்ளை எழுதியதாக வெளிப்பட்டிருக்கும் சிருஷ்டிலேக் கடிதம் யாரால் எழுதப்பட்டதெனத் தெரியவில்லை.

அநாவசியமான அந்தக் கடிதத்தை யார்தான் எழுதிப் பிரசுரிக்கச் செய்தனர் என்ற உண்மையை க்ஷத்திரியன் ஆசிரியர் மிஸ்டர் சு. அ. வர்மா தெரிவிக்கக் கடமைபட்டிருக்கிறார்.

இந்த ஓர் உண்மைக்கடிதத்தை பத்திரிக்கையில் பிரசுரித்து கு. சங்கரன் பிள்ளை யென மாறுவேடமாக வெளிவந்தவர் யாரெனத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

சென்னை க்ஷத்திரிய மித்திரன் அருப்புக்கோட்டை நாடார்குல மித்திரன் இரு பத்திரிக்கைகளோடு வாதஞ் செய்யும் க்ஷத்திரியன் கொஞ்சமேனும் எதிர்காலத்தை நினையாது காயாமொழி ஆதித்த நாடார்கள் விஷயமாகவும் குறுக்கிட்டு இழுத்து வைத்திருப்பது பெருந்தப்பு. அல்லது ஏற்றதல்ல இம்மாதிரியான உண்மைக்கடிதம் க்ஷத்திரியன் திராவிடன் ஆகிய இரு பத்திரிகைகளுக்கும் 20-4-25-ல் அனுப்பட்டிருக்கிறது. சுபம்!

* க்ஷத்திரியன். *

தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

கொஞ்சங் காப்பிகளே கையிருப்பு.

புருஷோத்தமன் அல்லது யாதவ அன்றில்.

(187-ம் பக்கத்தொடர்ச்சி.)

(ஆதித்தன், அ. குமாரகுருபரன்.)

மன்னன் தனது பிந்திய மந்திரி பிரதானிகள் புடைசூழ ஆசனத்தில் உட்கார்ந்து தேச விசாரணை செய்யும் சமயத்து, முன்னர் காளியிடம் சென்ற தூதர் இருவரும் அதிவேகமுடன் வந்து, அரசன் சமுகத்தில் தேவதையளித்த பதிலை நீட்டினர். அரசன் தேவியின் ஓலையை வாசிக்க ஆரம்பித்தார். கடிதம் பின் வருமாறு:—"ஹே! புருஷோத்தமா? முன்பின் உணராது கற்பரசியாகிய ரங்கநாயகியை நீ வீணே பழிசுமத்தி சிறையுள் புகுத்தினை. பின்னர் இருகுழந்தைகளையும் அரண்மனையை விட்டுப் பிரித்தனை. இரண்டாம் மந்திரியின் நாச காலத்திற்கு நீயே காரணமாகினை. முதன் மந்திரி நாட்டைவிட்டோடியதற்கும், சந்திரசேகரனைக் குற்றஞ்சாட்டியதற்கும் நீ தகுந்தபலனை அநுபவிப்பாய் இனியேனும் 'எண்ணித் துணிக கருமம்' என்னும் தமிழ்மறையைப் பின்பற்றுவாயாக." இவ்வார்த்தைகளை வாசித்ததும் புருஷோத்தமன் மனங்கலங்கினான். முகமுழுவதும் வேர்த்தது. ஆ என்றலறினான். என்ன மோசம் தெரியாமையால் கெட்டேனே. அரசபதவியிலிருக்கிற யான் முன்பின் ஆராயாது பெண், ஆண், சிசுக்களுக்குத் துரோகஞ் செய்தேனே. என்னே! எனது மதியீனம். இத்தனைக்கும் காரணம் யென்ன. நண்பன் சந்திரசேகரனை எனது மனைவியைக்கொண் டுபசரிக்கச் சொன்னதல்லவா? மயிரூடாடா நட்பு பொருளூடாடக் கெடும் என்பது குறள். பொருளூடாடும் போதே நட்பு கெடுமாயின் பெண் ஊடாடும் போது கெடாமலிருக்குமா? அய்யோ வீட்டின் அந்தப்புரத்தில் அந்நிய ஆடவர் பழகுவதினால் என்ன கேவலம் விளைகிறது. ஏ பாரதமாது பயின்ற அருந்தவப் புத்திரர்களே உங்கள் வீட்டுக் கன்னியர்களை ஆடவர் குழாங்களுக் கனுப்பவேண்டாம். ஆப்த நண்பராயிருப்பினும் உங்கள் அந்தப்புரத்திற் கழைக்க வேண்டாம். காமம் யாரைத்தான் விட்டது. அது அக்கினி போன்றது. தான், பிறர் கவனிக்காது சாக்ஷாத் எம்பிரானை காமவேட்கைகொண்டு தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட பாவையைப் புணர ஆரம்பித்தானாயின் அவனது ஞானத்தி ஆயிரத்தி லொருபங்கிலா மானிடஜென்மத்தைச் சொல்வானேன். நமது மாதர்களின் வாலிபப் பருவம் செல்லும்வரை, அவர்களை ஆடவர் சகவாசமில்லா விடங்களிலேயே இருக்கச்செய்யுங்கள். பாவியான் அறியாத்தனமாக நடந்து, நிரபராதியான எனது நண்பனையுங் கடிந்து தேவதையின் கோபத்திற் குள்ளாகினேன் என்று பலவாறு புலம்பினான். என்செய்ய, அணைகடந்த வெள்ளம் அழுதிடின் வருமோ.

(15-வருடங்கள் கழிந்தன.)

ஏழாம் காட்சி, சுந்தரபுரி அரண்மனை.

சந்திரசேகரன்:—மார்த்தாண்டரே! நீவிர் வந்தகால முதல் நமது நாடு மென்மேலும் செழிப்புற்று ஓங்குவது பிரத்தியக்ஷமாக விளங்குகிறது.

மார்த்:—அரசே! அவனன்றி ஓரணுவும் அசையாது. நாம் வாழ்வதும்தாழ்வதும் ஈசன் செயலேயன்றி நமது செயலல்ல,

சந்தி:—மந்திரி! ராஜீய விஷயங்கள் அரண்மனை நிகழும்போது தவறாது வந்து கவனித்து வருகிற நமது இளவரசனாகிய குலசேகரனை இப்போது ஏறக்குறைய ஒருமாதகாலமாக, காலை நடுப்பகல், மாலைக்காலங்களில் அரண்மனையில் காண்பது அரிதாயிருக்கிறது. ஆகார சமயங்களுக்கு வருவதும் சிறிது அன்னமுண்ணுவதும் உடனே புறப்பட்டு விடுவதுமாக விருக்கிறான். இதன் விபரம் யாதென விளங்குகிறதில்லை. இதைத் நீர ஆராய்ந்துரைக்குமாறு வேண்டுகிறேன்.

மூன்று நாட்கள் கழிந்தபின் மார்த்தாண்டர் மன்னனிடம், இளவரசன் நகிரிலுள்ள கோயில் தெருவில் ஓர் யாதவன் வீட்டில் நுழைவதாகவும் ஆங்கு ஓர் கன்னிகையுடன் சம்பாஷணை செய்து தனது காலத்தை கழிப்பதாகவும் தெரிவித்தார். இளவரசன் கன்னிகையுடன் காலங் கழிக்கின்றனென்ற சொல்லைக் கேட்டவுடன் அரசன் ஓர்விதக் கோபமும் வீரமும் கொண்டான். மந்திரியாரே! அப்படியாயின் நாமும்அந்தஇல்லத்தைகாணவேண்டுமென்றார்.

எட்டாம் காட்சி, யாதவ வில்லம்.

ஆயர் பாடியில் சுப்புக்கோனர் வீட்டில் அன்று ரோமசங்கராத் திருநாள் நடைபெற்றது. ஆண், பெண், பாலர்கள், யௌவனர், விருத்தாப்பியர் யாவரும் குழுமியிருந்தனர். சிற்சில வியாபாரிகளும் அங்குவந்து சில்லரைச் சாமான்களை விலையாக்கிக் கொண்டிருந்தனர். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொடுத்துக்கொண்டிருந்தனர். வாலிபன் ஒருவன் வனிதை ஒருத்தியுடன் கொஞ்சிக் குலாவுகிறான். வயோதிகரிருவர் அங்கு நடக்கும் சகல விஷயங்களையும் கவனித்துக்கொண்டிருக்கிறார். சிறிது நேரத்திற்குப்பின் வயோதிகருள் ஒருவர் அங்குள்ள ஓர் அழகிய யுவதியிடம் பேசிக்கொண்டிருந்த விடனிடஞ் சென்று, 'அப்பா உன் பெயர் யாது? உன் ஊர் பெயர் யாது எனச் சில கேள்விகள் கேட்டார். அப்பையன் தனது ஊர் காதலூர் என்றும், தனது பெயர் மதியூகன் என்றும் கூறினன். அவ்வயோதிகர் பின்னால், சகல ஜனங்களும்கூடி விளையாடும் சமயத்து நீமட்டும் தனித்து இக்கன்னிகையுடன் வார்த்தையாடலாமோ என, வாலிபன் நான் ஏனையோர் பெறும் இன்பத்தைப்போல் பன்மடங்கு இதில் அனுபவிக்கின்றேன் ஆனபடியில்என் காலத்தை இங்கே செலவிடுகிறேன். என்றான் கிழவர் பின்னால் 'ஒவ்வொருவரும் தங்கள் நண்பர்களுக்கு வேடிக்கைச் சாமான்கள் வெகுமதி யளிக்கிறார்களே நீ யுனது காதலிக்கு யென்ன அளித்தனை யென்றனர். உடனே பையன் அவர்கள் யாவரும் பொருட்களை யளித்திருக்கின்றனர். நானோ விலைமதிப்பொணாச் செல்வமாகிய என் இதயத்துள்ள அன்பை அவள்பாற் செலுத்தியிருக்கிறேன் யென்றான். விருத்தர் உடனே விவாஹமாகாத ஓர் கன்னிகையுடன் இவ்வாறு தனித்துப் பேசுதல் நீதியோ என்று கேட்க, அதற்கு நான் இக்கன்னிகையே மணந்துகொள் வேனுகையாலது குற்றமாகாதென மொழிந்தான். விருத்தர் நீ மணந்துகொள்வது உறுதிதானு யென்று பலமாகக்கேட்டார். பையனும் ஆமாம் வாஸ்தவமே என்றனர். உடனே விருந்தரிருவரும் தங்களின் ஆபரணங்களையும் ஆடைகளையும் கழற்றி வீசி நிமிர்ந்துநின்றனர். இவர்களைக் கண்டதும் பையன் திகிலடைந்து கற்றூண்போல் நின்றான். விருத்தராகிய சந்திரசேகரர் 'குலசேகரா, நீ அரசகுலத்தில் பிறந்திருப்பதையு முணராது; கேவலம் தெருத்தெருவாக நெய், பால், தயிர் எனக் கூவிக்கூவி விற்கும் இடையர்வீட்டு மாதின்மேலிச்சை கொண்டாயா? எனது கெட்டகாலத்திற்கு நீ தோன்றினுய்போலும் உடனே புறப்பட்டு அரண்மனை வந்துசேர, இன்றேல்இராஜ்ய முன்னைச் சேராது; மந்திரி மார்த்தாண்டரே குலசேகரனை யழைத்துவாரும்' என்று அரண்மனைக்குப் புறப்பட்டான்.

சிறிதுநேரத்திற்கெல்லா மக்கன்னி, இளவரசனைப் பார்த்து 'நீ என்னை மோசம்செய்யவந்தவர் அல்லவா. மதியூகன் என்றும், ஜாதியில் கோபாலர் என்றும் என்னிடம் பொய் கூறி ஏமாற்றினீரன்றோ? உமக்கேன் இத்தூர்ப்புத்தி வந்தது. உமது பிதா தான் ராஜனென்கிற கர்வத்தால் பற்பல விதமாக என் ஜாதியை இழிவாகப் பேசுகிறாரே அவர் கிருஷ்ணபரமாத்மா ஜெனித்தது எங்கள் ஜாதி என்பதை யுணரார் போலும் நீர் இங்கு அரைக்கணமும் நிற்கலாகாது ஓடிவிடும் என்றாள். குலசேகரன் 'கண்ணே, அவர் பிதற்றியதற்காகக் கவலைப்படாதே நான் பிறிதொரு மாதை விவாஹம் செய்யேன். நீயே எனக்குற்ற துணை என இதோ சத்தியம் செய்கிறேன். மார்த்தாண்டரே இக் கன்னிகையையே நான் மணக்க

வேண்டிய திருப்பதால், இவளைப்பிரித்து ராஜ வைபோகத்தை விரும்பி என்றால் அரண்மனைக்கு வரமுடியாது. உமது பிரியம்போல் செய்யும்" என்றும் சிறிதுநேரம் அமைதிருந்து கொண்டு மந்திரியும் பெண்ணைப் பெற்றோரும் அரசனுக்குப் பயப்படுகிறார்கள். இளவரசனோ கன்னிகையை விரும்புகிறார். மதியூகியாகிய மார்த்தாண்டர் யாதுசெய்வதெனத் தோன்றாது விழிக்கிறார்.

சப்புக்கோனரே, நீர் உமது கன்னிகையுடன் இத்திருப்பதின் இளவரசன் உண்மையாகவே சதா இங்கு வருவன். அதனால் அவனுக்கும் உமக்கும் தண்டனை ஏற்படுவதோடு, இப்போது இராசாசனை அழைத்துச்சொல்லாவிட்டால் எனக்கும் பிராணநாசம் நேரிடலாம். ஆகையால் நாம் மூவரும் க்ஷேமமாய் வாழும் வகைதேடவேண்டியதிருக்கிறது. இணைபிரியா அன்றிலாக யாதவகுலத்தைச் சேர்ந்த நீங்களிருவரும் ஒத்துவாழ விரும்புகிறபடியால்; உங்களைக் காப்பாற்றவேண்டியது என்பிரதான கடமை. நான் ஏறக்குறைய பதினைந்து வருடங்கட்குமுன் தருமாபுரியின் புருஷோத்தம மஹாராஜனிடம் மந்திரியாக இருந்தேன். அச்சமயம் நமது சந்திரசேகர மன்னனை அவர் அநியாயமாகக்கொல்லத் துணிந்தனர். உடனே யான் இவ்விஷயம் தவறானது என உணர்ந்து, சந்திரசேகருடன் இவ்வரண்மனைவந்து சேர்ந்தேன். குணசாலியாகிய புருஷோத்தமர் இப்போது 'நீர்கிழிய எய்த வடும்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்' என்றபடி தனது சினத்தை மாற்றியிருப்பர். நாம் அங்கு சேர்வோமென; யாதவ அன்றிலிருவருடன், சப்புக்கோனரும் தனது ஆடை ஆஸ்தியுடன் மார்த்தாண்டர் சகாயத்தால், தருமாபுரி அரண்மனை யடைந்தனர்.

(தொடரும்.)

கோத்திரப் பெருமை.

உயர்ந்த சாதியார்தங்களது மூலபுருடர்களை கோத்திரத் தலைவர்களாகக்கொண்டு வழங்கி வருகிறார்கள். ஆனால் தாழ்ந்த சாதியார்கள் மிருககோத்திரத்தையும், பட்சி முதலிய ஜெந்துக்கள் கோத்திரங்களையும் பெற்று வழங்கி வருவது உலகவழக்கு. அக் கோத்திரத்தாலேயே அவர்களது சாதியின் தன்மையை நன்கு அறிந்துக்கொள்ளலாம்.

சிங்க கோத்திரம்.

"Kesari (lion):—A gotra of Kurni" Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. III. P. 279 குரனி என்னுஞ் சாதியாருக்கு சிங்சகோத்திரமுண்டு. கேசரி என்னும் மறுபெயரால் அழைக்கப்படுகிறது. Kurni:—The name Kurni is, according to the Census Report, 1901, "a corruption of Kuri (sheep) and Vanni (wool) the castes having been originally weavers of wool " " They employ jangams as priests." Vide, Thurston's Castes. Vol. IV. P. 130. குரனி எனப்படுவர் 1901லத்து செனசெஸ் திட்டப்படி கம்பளி நெய்பவர். இவர்களுக்கு பண்டாரங்களே புரோகிதர்.

ஒட்டை கோத்திரம்.

"Vatte (Camel):—A gotra of Kurni." Vide, Thurston's Caste. Vol. VII. P. 330. ஒட்டை கோத்திரமும் குரனி என்னுஞ் சாதியாருக்குண்டு.

குதிரை கோத்திரம்.

Gurram (horse):—A gotra or exogamous sept of Kurni and Vakkaliga. Vide, Thurston's Castes. Vol. II, P. 309. Vol. IV, P. 96. குர்ரம் அல்லது குதிரை கோத்திரம், குரனி என்னுஞ் சாதியாருக்கும், ஒக்கிலியன் என்னுஞ் சாதியாருக்கும் உரியது.

நரி கோத்திரம்.

"Nariangal (nari. Jackal):—An exogamous sept of Vallamban." Vide, Thurston's Castes. Vol. V, P. 248. வலம்பர்

நரிவகுப்பைச் சார்ந்தவர்கள். வலம்பர் மீன் பிடிப்பவர்கள். நரிச்கு சம்பு என்னும் பெயரும் உண்டு. சம்புகோத்திரமெனினும் பொருந்தும்.

குக்கிற்பட்சி கோத்திரம்.

"Kovila (Indian Cuckoo):--A gotra of medara" Vide, Thurston's Castes. Vol. IV, P. 37. மிதரா என்னுஞ் சாதியாருக்கு குக்கிக்பட்சி கோத்திரமுண்டு.

ஊர்க்குருவி கோத்திரம்.

"Kurini (sparrow):—A gotra of Kurni." Vide, Thurston's Castes. Vol. IV, P. 130. குரனி சாதியாருக்கு ஊர்க்குருவி கோத்திரமுமுண்டு.

வெட்டுக்கிளி கோத்திரம்.

"Midichi (locust):—A gotra of Kurni." Vide, Thurston's Castes. Vol, V. P. 63. குரனி என்னுஞ் சாதியாருக்கு வெட்டுக்கிளி கோத்திரமுண்டு.

அணில் கோத்திரம்.

"Inichi (squirrel):—A gotra of Kurni." Vide, Thurston's Castes. Vol. II, P. 371. குரனி என்னுஞ் சாதியாருக்கு அணில் கோத்திரமுண்டு.

ஆமை கோத்திரம்.

"Kamadi (tortoise):—A gotra of Kurni" Vide, Thurston's Castes. Vol. III. P. 93. குரனி என்னுஞ் சாதியாருக்கு ஆமை கோத்திரமுண்டு. "Kurma (tortoise):—A gotra of Nagaralu." Vide, Thurston's Castes. Vol. IV, P. 130. நகராலு என்னும் சாதியாருக்கும் ஆமை கோத்திரமுண்டு.

எலி கோத்திரம்.

"Mushika (rat):—A gotra of Nagaralu." Vide, Thurston's Castes. Vol. V. P. 119. நகராலு என்னுஞ் சாதியாருக்கு எலி கோத்திரமுண்டு.

எறும்பு கோத்திரம்.

"Ken:—Ken (red) and Kenja (red ant) have both been recotded as gotra of Kurni" Vide, Thurston's Castes. Vol. III, P. 278. குரனி என்னுஞ் சாதியாருக்கு எறும்பு கோத்திரமுண்டு.

மீன் கோத்திரம்.

"Bombadai (fish):—A gotra of Medara." Vide, Thurston's Castes. Vol. I, P. 256. மெதரா என்னுஞ் சாதியாருக்கு மீன் கோத்திரமுண்டு.

ஓநாய் வகுப்பு.

"Tolar (Wolf):—An ezogamous sept of Halepaik" Vide, Thurston's Caste. Vol. VII. P. 173. அலபெக் என்னுஞ் சாதியாருக்கு ஓநாய் வகுப்பு என்பதொன்றுண்டு.

ஆகவே இவற்றால் தாழ்ந்த சாதியார்கள் மிருக கோத்திரத்தை யுடைத்தாயிருத்தலையறிக. சம்பு கோத்திரமும் இவ்வகையே!

(பத்திராதிபர்.)

அகராதி நன்கொடை.

சென்னை மகா-ா-ா-ஸ்ரீ க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிப ரவர்களுக்கு மதுரை தமிழ்சங்க அகராதி (3) வால்யம் விலை ரூ 15—8—0 மேல்கண்ட புஸ்தகம் நன்கொடையாக விலைக்கு வாங்கி கொடுத்தவர்களின் பெயர்.

மகா—ா—ா—ஸ்ரீ கனம், மதுரை

பெ. சு. பெரியசாமி நாடார் வரவு ரூ 3-0-0
பா. அ. பெ. பகூய நாடார் வரவு ரூ 3-0-0
ஆ. கா. ஆறுமுக நாடார் வரவு ரூ 3-8-0
பெ. அ. ஆறுமுக நாடார் ,,, ,, 1-0-0
ச. பே. சிதம்பர நாடார் ,,, ,, 1-0-0
சி. மீ. க. சங்கரலிங்க நாடார் ,,, ,, 0-8-0
மு. சு. முத்தம பெருமாள் நாடார் ,, 0-8-0
அ. பெ. பிக்ஷகுட்டி நாடார் ,,, ,, 0-8-0
நா. கு. அ. சங்கரலிங்க நாடார் ,, 0-8-0
ந. சி. பழனிச்சாமி நாடார் ,,, ,, 0-8-0
உ. ப. உலகநாத நாடார் ,,, ,, 0-8-0
கி. சி. சங்கரலிங்க நாடார் ,,, ,, 0-8-0
க. மு. லட்சுமண நாடார் ,,, ,, 0-8-0

கல்வெட்டு.

நாகர்க்கோவில் ஆதிமூல விநாயகர் கோவிலுக்குச் சமீபம் நிற்கிற ஒரு கற்றூணில் கொல்லம் 682-ம் ஆண்டு ஆனிமாதம் 15-ம் தேதி எழுதிய ஒரு கல்வெட்டில்: காமுகத்தலைபயணம் பதவாரம் படிப்பணம் யானைவரி என்ற வரிகள், தோவாளை மலைக்கும் பறளிமலைக்கும் இடையில் இடை நாட்டிலுள்ள நாடான் மாரிடத்திலிருந்து கவர்மெண்ட் அனுமதி யில்லாமல் சில ஜாதிக்காரர் பிரித்து (வசூலித்து) வந்ததைக் கண்டித்து நிறுத்தல் செய்திருக்கிறோம்.

என்று திருவிதாங்கூர் ஸ்டேட்டு மானுவல் மலையாளப் புத்தகத்தில் 43-வது பக்கத்தில் குறித்திருக்கிறது. அதிலிருந்து நம்மவர்களை 418-வருடத்திற்கு முன்னரே நாடான் என்று அழைத்துவந்ததாக திருவிதாங்கூர்கவர்மெண்ட் ரிக்கார்டே சான்றுபகருகின்றன.

C. ஸ்ரீகிருஷ்ணபெருமாள் நாடார்,
திருவிதாங்கூர்.

விஜயா மதிப்புரை.

இப்பெயர் புனைந்த பத்திரிகை கல்வி அபிவிர்த்தியில் முன்னின்றும், கைத்தொழில்விர்த்தியில் சிறந்தும், செல்வ விர்த்தியில் சிறப்புற்றும், வர்த்தகமானத்தில் வளம்பெற்றும், நாகரீக நடையில் நலமடைந்தும். இலௌகிகத்தில் ஆசாரமாகவும், விவசாயத்தில் பெயர்பெற்றும் ஒற்றுமையில் ஒவ்வொருவர் மனதையும் ஒருமிக்கச் செய்வதுந் தவிர பூர்வீக சாதனங்களையும், இராஜ்ய விஷயங்களையும், பக்திரசமும், தேசீய முன்னேற்றமும், உள்ளூர் வெளியூர் செய்திகளும், இனிய தமிழ் நாவல்களும், பல அரியபெரிய வியாசங்களையும் தாங்கி இனிய தமிழ்நடையில் இன்பம் விளைவிக்கும்படி பிரதி ஞாயிறுதோறும் வெளிவருந் தமிழ்ப்பத்திரிகை.

உள்ளூர் வருட சந்தா ரூபா 3—8—0
வெளியூர் வருட சந்தா ரூபா 4—8—0

விலாசம்:— விஜயா காரியாலயம்,
தெப்பக்குளம்போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

—(o)—

ஸர். பி. தியாகராய செட்டியார் காலஞ்சென்றார்.

தாய் நாட்டிற்காகவும், பிராமணரல்லாதார்களின் முன்னேற்றத்திற்காகவும் பெரிதும் உழைத்துவந்த சென்னை மகாணத்தின் அருந்தவப் புதல்வராகிய ஸர். பி. தியாகராய செட்டியார் இறந்துபோனார் என்பதைக் கேட்டு மனம் வருந்தாத தமிழர் இருக்கமாட்டார். ஸர். செட்டியார் 1852-ம் வருஷத்தில் ஜெனித்தார். 1873-ம் வருஷத்தில் பி. ஏ. பரீட்சையில் தேறினார். சர்க்கார் உத்தியோகங்களில் அவருக்கு விருப்பம் கிடையாது. பொதுஜனசேவையிலேயே அவர் நாட்டங்கொண்டார். ஆகவே சுதந்திரமுள்ள வியாபாரத் துறையில் அவர் இறங்கினார். ஸ்ரீ செட்டியார் பொது வேலையில் ஈடுபட ஆரம்பித்தது முதல் சென்னை முனிசிபல் கார்ப்பரேஷனில் அங்கத்தினராயிருந்துவந்தார். அவர் மரணபரியந்தம் சுமார் 40-வருஷங்களாக அதில் அங்கத்தினராயிருந்து பாடுபட்டு வந்திருக்கிறார். முனிசிபல் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருக்கவேண்டுமென்ற விதி ஏற்பட்டவுடன் முதல் முதல் நமது செட்டியாரே தெரிந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்னால், வயதாய்விட்டதன் காரணமாக ராஜிநாமாச் செய்வதற்கு முன்பு வரையிலும் நமது செட்டியாரே சென்னை முனிசிபல் சபைத் தலைவராய் இருந்துவந்தார். இதிலிருந்து சென்னைவாசிகள் அவர்மீது வைத்துள்ள மதிப்பையும், நம்பிக்கையையும் உணர்ந்துகொள்ளலாம்.

சென்றமாதம் 19உ அவர் உடம்பு அசௌகரியமாய் படுக்கையில் படுத்தார். பின்னால் அவருடைய இடதுகன்னத்தில் ஒரு பிளவை புறப்பட்டது. எத்தனையோ வைத்தியர்கள் வந்து பார்த்தும் அவருடைய நிலைமை வரவர மோசமாய்க்கொண்டு வந்தது. 28-ந்தேதி பகல்

12-மணிக்கு மிகவும் நெருக்கடியாயிருந்தது. மாலை சிறிது குணமாயிருந்தது. ஆனால் அது முற்றிலும்குணப்படாமல் இரவு 9-45மணிக்கு விண்ணுலகேகினர். அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 74-என்றாலும், அவருடைய பிரிவு தமிழருக்கு சகிக்க முடியாததாகும். அவருக்கு ஒரு குமாரரும், 5-குமாரத்திகளுமுண்டு. அவர் ஆத்மா சாந்தியடைவதாக.

கிராமப் பஞ்சாயத்.

(க. பொ. சோமசுந்தர நாடன், கச்சினவிளை.)

திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள "கச்சினவிளைக் கிராமப் பஞ்சாயத்"தில் சென்ற மூன்று கூட்டங்களில் நிறைவேற்றப் பட்டவைகளில் குறிப்பிடத் தகுந்த தீர்மானங்களாவன:—

1. கிராமப்பஞ்சாயத் ஆக்ட் 16வது செக்ஷன்படி ரெயில் ரோட்டிற்கு வடபுறம் சர்வே 106ம் நீர் நிலத்தில் கச்சினவிளைசந்தை என்ற பெயருடன் வியாழக்கிழமை தோறும் சந்தை கூட்டுவிக்க அனுமதி கோரியும்.

2. ஷை ஆக்ட் 15வது செக்ஷன் 14வது உட்பிரிவின்படி கச்சினவிளைபவண்டு நிர்வாகத்தை இந்தப் பஞ்சாயத்திடம் விடும்படிக் கோரியும்.

3. ஷை ஆக்ட் 16வது செக்ஷன் 4வது உட்பிரிவின்படியும் D. Dis 319 நீர் உத்தரவின்படியும் இக்கிராமத்தையடுத்த சடம்பாற்குளம் பாசிக்குத்தகை லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரத்தை இந்தப்பஞ்சாயத்திற்கு கொடுக்கும்படியாகவும்.

4. ஷை ஆக்ட் 25வது பிரிவு (b) உட்பிரிவின்படி இந்தப்பஞ்சாயத்தின் வரி வசூலிப்பதற்கும், இதரவேலைகளைப் பார்ப்பதற்கும் மாதமொன்றிற்கு பத்துரூபாய்க்கு மேற்படாத சம்பளத்தில் சு. சொக்கையாத் தேவர் என்பவரை பில்கலெக்டராக நியமித்துக் கொள்ளும்படி பிரசிடென்டவர்களுக்கு அதிகாரங் கொடுத்தும்.

5. ஷை ஆக்ட் 29வது விதியின்படி இந்தப் பஞ்சாயத் வரிவசூல் பாக்கிப்படுகிற இனங்களை வசூலிக்கும் அலுவலை கிராம முனிசிப்பிடம் விடவேண்டுமென்றும்.

6. மெட்ராஸ் 1920ம் வருஷத்திய 14வது லோக்கல் போர்டுகள் ஆக்ட் 3வது ஷெட்யூல் 1வது பிரிவு (ஐ) உட்பிரிவு கிராமப்பஞ்சாயத் விஷயத்திலும் பிரயோகிக்கப் படத்தக்கதாய் இருக்க வேண்டுமென்று கோரியும்.

7. (a) மெட்ராஸ் 1792ம் நீர் கவர்ண்மென்டு உத்தரவின்படியும் 8. 8. 24 தீ சட்டசபையில் 67 நீர் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலின்படியும் சுமார் ஒருவருஷமாகியும் குதிரைமொழி பாரஸ்டு ஒதுக்கப் படாதிருப்பதினால் கச்சினவிளைக்குத் தென்புறம் ஷை பாரஸ்டில் அரைமைல் விஸ்திரண பாகத்தை இந்தப் பஞ்சாயத் எல் கையில் குடியிருக்கிற ஜனங்களின் பெயரால் தனித் தனியாய் பட்டா செய்து கொடுக்கும்படி கோரியும்.

(b) ஷை பாரஸ்டின் பாகத்தை ஜாரிசெய்வது சம்மந்தமான ஆலோசனைகளை எதிர்பார்க்கிற சமையத்தில் இந்தப் பஞ்சாயத்தும்கலந்து கொள்ளப்படவேண்டுமென்றும்; இந்தக்கிராமஜனங்களின் நல வுரிமைகளைக் கோரிய இதர பலதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு காருண்ய சவர்ணமெண்டாரவர்களின் அங்கிகாரத்திற்கனுப்பப்பட்டிருக்கின்றன. கிராமப்பஞ்சாயத்எற்படுத்தினால் கிராமஜனங்கள் வரிப்பளுவினால் நிர்ப்பாதப்படுவாரென்றும் வேறு பலவிதமாகவும் இப்பகுதியில் அநேக கிராம வாசிகள் பஞ்சாயத் ஸ்தாபித்துக்கொள்ள முயற்சியாதிருப்பதாகத் தெரிகிறது. யூனியனைப்போன்ற கஷ்டங்கள் கிராமப் பஞ்சாயத் விஷயத்தில் கிடையா தென்பதையும் கிராமப்புனருத்தாரண வேலைக்கு இந்த பஞ்சாயத்முறையைப் போன்ற சிறந்த சாதனம் வேறெதுவுமில்லையென்பதையும் இப்பகுதியில் கச்சினவிளை கிராமப்பஞ்சாயத் பெய்ப்பித்து முன் மாதிரி காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது சுயாதீனத்தையும் கிராம முற்போக்கையும் விரும்பக்கூடிய எல்லா அபிமானிகளும் நல்ல சந்தர்ப்பத்தைத் தவற விடாமல தங்கள் கிராமங்களில் பஞ்சாயத்களை ஸ்தாபித்து நமது பூர்வீக அரசியல் முறைகளை சட்டப்படி நிலைநாட்டிக்கொள்வது நலம.

ஊர்த்துவபுண்டரம்.

யாம் இங்கு தொடர்ந்து ஊர்த்துவபுண்டர விஷயம் எழுதிவரும் பிரகரணமிது. இனி இவ்வூர்த்துவபுண்டர வுள்வேற்றுமைகளை விடுத்துப் பொதுவாய் அவைகளுக்குரிய பயனை விளக்கிட முன்வருவோம். "ஊர்த்துவகதி விரும்புவோர் ஊர்த்துவ புண்டரந் தரித்தல் வேண்டும்" என வுபநிடதங் கூறி நிற்றலின், இந்த ஊர்த்துவபுண்டரம் ஊர்த்துவகதியெனப்படும் நற்கதியைக் கொடுக்கும் கருவியாயிற்று. இவ்வூர்த்துவ புண்டரம் எதுவுந் திருமண்ணாற்றான் தரிக்கப்படும். இனி மண்ணும் வெண்மை செம்மை கருமையாகிய முந்நிறம் பெற்றது. "வெண்மை 'சத்துவம்' செம்மை 'இராஜஸம்' கருமை 'தாமஸம்'" என்பது ஆன்றோர் துணிபு. கருமைமண் தமோகுண நிலையாதலின் அஃதொழிந்த இரண்டுவகைமண் திருநாமத்து அமையும் பொருளாம். இப்புண்டரங்களில கோபீசந்தனத்தாற்றரிக்கும் திருநாமம் வைதிகம் என்றோம். அக்கோபீசந்தனம் என்பது பொன்னிறம் பெற்றதோர் ரஜோகுணமலிந்த பொருள். ஆதலாற்றான் ரஜோகுணம் நிறைந்த பிரமதேவரே அப்புண்டரத்தைத் தரிப்பவருட் சிறந்தாரென ஓதப்பட்டதென்க. மேலும் கோபீசந்தனவுற்பத்தி சொல்லுமிடத்து 'சேபிகைகள் கழுவினர் ஆகக்கோபீசநதனம ஆயிற்று' என்றுளது. இங்கு கோபிகைகள் என்றது ஓர் ஜாதி மடந்தையர்களையல்ல. மற்று வல்லபாசாரிய ரெழுதியவாறு கோபிகைகள் எனப்படுவோர் உபநிடதங்களே. அவ்வுபநிடதங்களாய பேதைகளால் ப்ரம்மம் ஜீவரூபமாய் நின்று தம்மியலில் 'அகண்டம் ஆனந்தம்' இவற்றை ஒளித்திருக்க அவனிடந் தோன்றும் விருப்ப முதலிய சந்தனங்கள் கழுவப்படுகின்றன. அங்ஙனம் உபநிடதஞானத்தான் மறைந்த மலம் ஒழியப் பரம்பொருள் தன்னியல் பெறும் என்பதவர்கருத்து. உலகத்தில் சந்தனம் இன்பப்பயனுக்கங்கம் என்பது எல்லோருமறிந்ததோர் விஷயமே. அன்றி வேதத்திலுங் கடவுள் திருமேனியில் அதுபற்றி ஏதோ அவர் நின்மலத் திருமேனியழகை ஒளித்திட அவர் உண்மை யுருவத்தைக் கண்டுகளிக்கக் கருதி அவ்வுபநிடத மடந்தைகள் கழுவினர் என்ற தன்மையாம். இங்குள்ள முறை இது. கடவுள் எங்கும் நிறைந்த வானந்தமாயுள்ளவர். அவருக்கு வித்தியாசம்பந்தத்தால் அமைந்த திருவுருவம் ஒன்று. அவ் வித்தியாசம்பந்தத்தால் அமைந்தது ஜீவத்திருவுருவமாம், அச்சீவனுக்குப் பெண்ணாசை முதலிய பல அர்சங்கள் நிறைந்த அணாதிமலம் இங்கு கோபீசந்தனமெனக் குறிப்பிடப்பட்டது. அம்மலம் ஒழிய வேண்டி அம்மங்கையரையே கடவுளடியாகத் தியானித்தல்வேண்டும். ஆயின் கடவுளது மகாபுருஷத்தன்மை விளங்க இவனும் அத்தலைவனை நோக்கித் தலைவியாய் நின்றொழுக, இறுதியிற் பேரானந்தமடைவான் என்பது. இனி "இவ்விதங் கோபிகள் கழுவியது கோமதி நதியிற் சக்கிரதீரத்தில் உறைந்து மண்தன்மை பெற்று மாற்றமடைந்து திருமால்சக்கிரத்தால் அடையாளம் செய்யப்பெற்றது" என்று சொல்லப்படுவதின் கருத்து யாதெனில்; உலகத்தில் அழுக்கை யலம்புவது ஜலத்தாலென்பது இயற்கை. ஜலம் என்பது இங்கு பாசஞானம் பசுஞான மிரண்டும். இதனால் மலம் ஒழிந்து ஆன்மாவைவிட்டு விலகியும் மலக்கூட்டத்திற் சேர்ந்து சக்திகுன்றிக்கிடக்கும். அதைச் சங்கிரங் கொண்டு ஸர்வாநுக்கிரகஞ் செய்யுங் கடவுள் அழித்திட அது அழிந்து மண்ணாவது திண்ணம். இனி மலம் எவ்விதம் பரிபாகம்பெறினும் அவனருளையின்றித் தன்னிடமமைந்த வாசனை மாறப்பெறாதாகச் சந்தனமெனக் கூறப்பட மலத்தினிடமமைந்த இனியவாசனை அதை அவன் அழியாற் சங்கரிக்கவே மண்ணாவிடம் மாறியொழிந்தது. அவனருளால் வரும் வாசனையழிவே முக்தியென்பது ஓர்வதைச்சித்தாந்தமாதலால் என்க. அதுகொண்டே கோபீசந்தனத்தைப் பிரார்த்திக்குமிடத்தில் "பாவனிக்கக் கடவுட்டிருமேனியிற் றோன்றித் திருவாழியமையப்பெற்ற கோபீசந்தனம் என்னை

நல்வழியிற்சேர்க்கும்" என்று ஓர்வசனம் வாசுதேவ உபநிடதத்திலுள்ளது. இனி இக்கோபீசந்தனம் தரித்தற்குரிய விடங்களும் எவ்விடம் சதைக்கடினம் எவ்விடம் மாம்சம் அதிசம் அவ்விடமே என்று ஏற்படுகிறது. இது திருநீற்றிலும் அதிகமான சோஷணசக்தி யுள்ளதாகவே இதைச் சரீரமெங்குந் தரித்தல் விலக்கப்பட்டது. இதைச் சந்திகளில் திருநீற்றைப் போல் தரித்தல்கூடாது. தரித்தால் அக்கில் சளைச் சுபமற்றதாக்கி சிசவும் துர்மலமாக்கிவிடும். திருநீற்றின் ஆற்றல் வெகுசீக்கிரம் வெளிவருவது. மண்ணின் ஆற்றல் மெதுவாய் வெளிவரும். நீறு சிறுபான்மையியக்கும். மண் சந்திரவன் கிரணவலியால் பெரும்பான்மையியக்கும். திருநீறு சரீரத்தில் நீடித்திராது. மண்ணிற்கும் கோமுதலிய இடங்களில் அது நியமமாகவிருந்தால் புத்தியின் நிலை குலையும் என அதுபோன்றவிடங்களிற் றரிப்பதில்லை. இனி எவ்வித மண்ணுக்கு மிவ்விய லுண்டு. வெண்டிருமண் இதிலும் அதிகக் கமொற்றல் பெற்றது. ஆகலாற்றான் அதைத் தரித்த விடம் வெண்மைமாட்டும். சிறக அதிற்சிறிது காரமிசம். இனி அது விஷ்ணுபாதம் எனத் தியானிக்கப்படுவதால் எக்காலமும் அதைக்கண்ட பொழுதெல்லாம் அதிருநர்க்குச் சுகம் விட்டொழியாது அவ்வாழி யெந்தைபிரான் திருவடிகள் நிற்குமாயின் பெரும்புண்ணியம் இதனை யையுமெனச் சொல்லவும் வேண்டுமோ? இனி இவ்விஷயம் அறிந்தவன் தான் இப்புண்டரந் தரித்தவ னல்லவனுயினும், மற்றவர் தரிப்பதைப் பார்த்தவளவிலாவது அவன் ஸ்ரீ நாராயணசரணாவிந்தங்களைத் தியானிக்காதொழிய வனறிவு இடங்கொடாது. சில தாமரைக் குளம் போன்றதும்; சிலவிடம் தீபசிகைபோன்றதுமாய்த் தரிக்கப்படுகிறது. அதன் பயன்கள் அவைகளைப்பற்றிச் சொல்லுமிடத்தில் சொல்லுவோம். இப்புண்டரந் தருமசாஸ்திரங்களிலும் சிறுபான்மை புராணங்களிலும் சொல்லப்பட்டது. இனி வாசுதேவோபநிடதத்தில் இது அந்தணர்களுக்கு மட்டில் விதிக்கப்படினும் தந்திரங்களுள் மற்றையவருக்கும் விதிக்கப்பட்டமையின் அவர்களும் இதை தரித்தல் குற்றமாகாது. இதுவரையிற் செந்நிறப் புண்டரங் குறிக்கப்பட்டது. இனி மற்றைய ஊர்த்துவபுண்டரங்களையும் குறிப்பாம். வெண்டிருமண்ணு லமைக்கும் ஊர்த்துவ புண்டரம் ஆரியாசாரத்தைக் குறிக்கும் வேதங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் புராணங்களிலும் இவ் வெண்டிருமண்ணாற் குறிக்கப்படும் புண்டரம் எங்குஞ் சொல்லப்படவில்லை யாயினும் பாஞ்சராத்திரம் வைகாநஸம் முதலிய தந்திரங்களிற் சொல்லப்பட்டமையால் அதையும் எடுத்து எவ்விதத்திலும் பெருமையுள்ள வஸ்துக்களைக் கூறுமிவ்விடத்துக் கூறிவருவாம். இங்கு இப்புண்டரம் இடைவெளியுள்ளதும் கண்ணன் திருவடிவம் எய்தியதுமே. இதில் ஒரு திருவடி வடிவமும் இருதிருவடி வடிவமும் என்று இருவகையிருக்கின்றது. இவ்விஷயத்திற் சிறிதும் எமக்காக்கிரசமில்லை. இவருள் வேற்றுமை ஏதாமோ அதைக்குறிப்போம். இவ்விரு திருநாமங்களில் ஒன்றுக்குக் கமலம் நன்குய்த்தெரியும். மற்றொன்றில் நன்கு தெரியவராது. நிற்க எதுவும் ஆரியர் அனுஷ்டிப்பது ஒரு நற்பயனைக் கருதியேயன்றி வேறிராது. ஆகையால் இதன் பயன்களை அடியில்வருமாறு காண்க. உலகளந்தபெருமாள் திருவடிகள உலகெங்கும் பட உலகத்திருவுருத் திருமண் அவன் திருவடி சம்பந்தம் பெற்றமையான் இத்திருமண்ணைத் திருவடிகள்போல் பாவித்து அவ்வடிவமாகத் தானே தரிக்கவேண்டும். அத்திருவடிப்பெருமை இருவித சக்திகளாகவுளது. ஒன்று ஸ்தாவரம், மற்றது சங்கமம். ஸ்தாவரத்தைப் பூமியெனவும் சங்கமத்தை லக்ஷ்மியெனவும் உபசரித்துச் சொல்லலாம். அன்றி அசேதனம் பூமிதேவியெனவும் சேதனம் இலக்குமிதேவியெனவுங் குறிக்கற்பாலன. ஆகலாற்றான் பூமி சலிப்பதில்லை, இலக்ஷ்மி என்றஞ் சலிப்பவளென பெருவழக்கு. இங்கு அவ்விருசக்திகளில் திருமண் வடிவம் பூமிதேவியார் எனவும் திருச்சூர்ணம் இலக்குமி வடிவமென்று மேற்படும். இவ்விரு தேவிமாரும் திருமால் திருவடி சேவை செய்பவராதலின் இவ்விருதேவியர் காதலுக்

கியைந்த கணவனை தன்னைத் தமர்க்குக் குலதெய்வமெனக் குறிப்பது. இங்கு உட்கருத்து: வெண்டிருமண் காப்பின் இடையிற் திருச்சூர்ணமிடுதல் இம்முறையாற்றான். பாருங்கள்! மாந்தர் விரும்புவது ஆரோக்கியமும் முத்தி நிலையுமாகிய இம்மை மறுமை இன்பங்களே. எல்லா ஓஷதிகளையும் தம்முளடக்கப்பெற்ற பூதேவியார் அருள் ஆரோக்கியத்தையும் எவ்வித அறிவுந் தம்மிடமடக்கிய பெரியபிராட்டியார் திருவருள் வீடுகூடச் செய்யுமெனவும் அவ்விருகுறிகளும் அடங்கிய நாமம் தரிப்பது. ஆயின் ஆரோக்கியமும் வீடென்னும் இருபயனளித் தலைநாளும் சராசரப் பிரபஞ்சத் திருவுருவம்பெற்ற இருதேவியார் பற்றிக்கொண்டாடும் திருவடி மான்மியமுள்ள முழுமைநாதன் முதல்வன் திருவடி ஒன்றேனும் இரண்டேனும் எமக்குச் சரணம் என்பது சொல்லாலமையாது அமைப்பாலமைந்த ஓர்பொருள் வெண்திருமண் திருச்சூர்ணங்களாலமைந்த புண்டரத்திற்கென்பது மனதில்வைக்க இனிப் பெண்கள் மற்றவர் அடைந்த அமைப்பின் வேற்றுமைகளின் பயனை எடுத்துரைப்பாம்.

வேட்டைக்காரப்பள்ளியின் வீண்புரளி.

இக்குலத்திலுதித்த தூஷித்தலையேமேற்கொண்ட ஒருவர் ஒருபக்கத்தில் எம்சான்றோர் குலத்தைச் சுட்டி தாழ்ந்த சாதி, தாழ்ந்த சாதியெனத் தமுக்கடிக்கின்றார். தாழ்ந்த சாதியார் என்பவர் யாரெனப் புராணேதிகாசங்களையும் ஸ்மிருதியாதிகளையுஞ் சோதித்துப் பார்க்குமளவில் அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர் என்னுஞ் சாதியாரகளே தாழ்ந்த சாதியார்களெனப்படுவரென விளங்குகின்றது. அத்தகையோர் உற்பத்தி யாதென வினவின், பல சாதிகளிலும் சம்பந்தப்பட்ட கலப்புசாதியார்களையும்; ஸ்திரீ புனர்விவாகம்:—

புனர்விவாகஞ் செய்துகொள்ளக் கூடாதென்று ஆதிகால தர்மசாஸ்திரங்களில் ஆதாரத்தைக் காணாதபோதிலும், பிராமண க்ஷத்திரிய வைசியர்களிலும், சூத்திரர்களில் உயர் வகுப்பாரிலும் ஸ்திரிகளுக்கு புனர்விவாகம் செய்வதில்லை. சூத்திரர்களில் கீழான வகுப்பாரில் ஸ்திரிகளுக்குப் புனர்விவாகஞ் செய்வது வழக்கத்திலிருக்கிறது. (6. ம. ஹை. கோ. ரி. 379; 1. ம. 226; 17. ம. 479.) ஈனசாதிகளில் புருஷன் உயிரோடிருக்கும்போதும் பெண்களுக்குப் புனர்விவாகம் செய்வது வழக்கமாயிருக்கிறது. (இ. லா. ரி. 4. பம். 330; இ. லா. ரி. 8. ம. 440) ஹிந்துலா. 35-வது சட்டம்) என்பதை அனுசரித்து கூடுவிட்டு கூடுபாய்தலைப்போல், ஒருபுருஷனை விட்டு, மறுபுருஷனை மணக்குந் தன்மையையுடைய சாதியார்களையும்;

“விதவாவிவாகம்:—மனுஸ்மிருதியில் கர்ப்பதானத்துக்கு முந்தி வைதவியம் அடைந்த பெண்ணுக்கு புனர்விவாகம் செய்யலாமென்றிருந்தாலும், அதற்குப்பின் எழுதப்பட்ட சில ஸ்மிருதிகளில் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் உபயகட்சிக்காரர்களுக்கும் ஆதாரங்கள் தர்ம சாஸ்திரங்களிலிருக்கின்றன. எப்படியிருந்தாலும் தற்காலத்தில் சில தாழ்ந்த சாதிகளில் தவிர மற்ற சாதிகளில் விதவாவிவாகம் அனுஷ்டானத்திலில்லை.” ஹிந்துலா. 36-வது சட்டம்.) என்பதை அனுசரித்து விதவாவிவாக சம்மந்தமுள்ள சாதியார்களையுமே தாழ்ந்த சாதியார்களாவரென வரையப்பட்டுள்ளது. அந்தகைய நடபடிக்கைகள் எங்கள் சான்றோர் குலத்தில் வியாபித்திருக்குமேல், யாங்கள் தாழ்ந்த சாதியாரெனக் கூறுதற்குப் பின்னிடையோம். எங்கள் சாதியில் அந்த வழக்கங்கள் இன்றளவுங் கிடையாதென ஆங்கிலேயர்களும் தங்களது நூற்களில் எழுதி சாட்சி பகர்ந்துள்ளார்கள். இவ்வகை யாதொன்றிலும் ஈடுபடாத எம்குலத்தவரை இழிந்தகுலத்தவர் இழிந்தகுலத்தவர் எனக் கூறி இடர்ப்படுவதால் பயனென்னை?

“இல்லது வாராது, உள்ளது போகாது” என்

னும் பிரமாணத்தால், இல்லாத செய்கை ஒரு சாதியாருக்கு நூதனமாக ஏற்பட்டுவாராது. இருக்கும் செய்கையும் அச்சாதியாரை விட்டு அகலாது. இது உலக அனுபவப்பிரமாணமாதலின், அவ்வழக்கை நாளதும் உடையார் யாரென வறிந்து, அவர்களை இழிந்த சாதியாரெனக் கூறுவதை விட்டு, எம்குலத்தவரை இழித்துக்கூறல்நியாயமின்மையெனவறியவும்.

ஆனல் இரண்டரைஜில்லாவில் கோயில் பிரவேசமில்லாமையாலேயே தாழ்ந்தசாதியாரெனக் கூறுவதாயிருந்தால், மலையாளப் பகுதியில் செட்டி, வேளாளர், நாயுடுகளை கோயில் பிரவேசஞ் செய்யவிடார்கள். அதனல்அவர்கள் தாழ்ந்தசாதியார்களாவரோ? அது அத்தேசத்தில் ஏற்பட்ட வழக்கமாகும். அவ் வழக்கத்தை முன்னிட்டு வேளாளர் முதலியோர்களை தாழ்ந்த சாதியார்களெனச் சொல்ல முடியுமோ?

இராமனுதபுரம் ராஜாவே தங்கள் சாதியார்களை ஜனார்த்தனம் முதலிய சில கோயில்களில் விடுகிறதில்லை யென்றனர். அதனல் அவரைத் தாழ்ந்த சாதியாரென்று சொல்லிவிடலாமா? இந்த மீன்பள்ளியையே மலையாளக்கோயில்களில் சேர்க்கார்களே! அதற்கென்செய்வர். இவர் சம்பம் அங்குசெல்லாது. ஆகவே வேளாளருக்கு ஒருஜில்லாவில் தடையாயிருப்பதைப் போல், எங்களுக்கும் இரண்டரை ஜில்லாக்களில் தடை ஏற்பட்டிருக்கிறது. அதை முன்னிட்டு தாழ்ந்த சாதியெனச் சொல்லிவிடலாமா? அப்படிக் கூறுதல் மடமையென வறிவர். கலப்புமுதலிய அனுசார விவாகந்தாலேயே தாழ்ந்தசாதியென ரூபிக்கப்படும். இதுவே புராண சம்மதி. உயர்வு தாழ்வு கோயில் பிரவேசத்தாலல்ல.

இன்னொரு குறைகூறுவார். எங்கள் சாதியில் சமீன்தார் இல்லையெனவும்,அதனல் அரசசாதியாகாரெனவும் கூறுகின்றனர். ஜமீன்தார்களின் பெருமையை இப்பத்திரிகையில் நன்கு விளக்கியிருக்கின்றோம். பூர்வம் திருடர்களையும், போக்கிரிகளையும், தைரியவான்களையும் ஊர்க்காவல்காரர்களாக வேற்படுத்தப்பட்டது. அவர்கள் பாளையப்பட்டார்க மாறி, அவர்களே அங்கிலேயரால் ஜமீன்தார்களாக ஆக்கப்பட்டனர். இத்தன்மையை டிஸ்டிரிக்ட் மானுயூல் (Districts Manual) களிலும், மற்ற சரித்திரங்களிலும் கண்டுத் தெளியலாம். அதாவும் இக்காவல்காரர்கள் ஏற்பட்டது A. D. 1630-ம் வருடத்திற்கு பிற்பட்டே யாகும். அக்காலத்தில் இத்தென்தேசத்திலுள்ள சமீன்தார்களுக்கெல்லாம் தலைமையாக நின்றவர் இராமனுதபுரம் ராஜ குடும்பமே! அக்குடும்பமே A. D. 1602-ல் ஏற்பட்டதென்றால், அக்குடும்ப அதிகாரத்திற்குட்பட்ட, மற்ற சமீன்தார்கள் எக்காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும்? அதுவும் இவர்கள் தமிழரசர் காலத்திலிருந்து ஏற்பட்டவர்களெனக் கூறவும் நூற்பிரமாணங் கிடையாது. இதுதான் அவர்கள் கட்டியழுவும் சமீன்தாரின் பெருமையாகும். இப்பெருமையைக் கொண்டு அவர் பூச்சிக்காட்டுகிறார். அதை அவர்தான் மதிக்கவேண்டும்.

எங்கள் சாதியிலும் சமீன்தார்கள் இல்லாமல் போகவில்லை. அவர்கள் மேற்கூறியவிதம் ஏற்பட்டவர்களல்ல. திருநெல்வேலியில் நட்டாத்தி நாடார் ஜமீனும், நகரிஜமீனுக் கடுத்துள்ள ஓர் பகுதியை ஆளும் மாசிலாமணி கிராமணி என்னும் ஜமீன்தாரும் இன்னும் உண்டு.

ஆகவே இவர்களிலுள்ள சமீன்தார்களின் பெருமையையும், எங்களில் ஜமீன்தார்கள் இல்லையெனக் கூறும் அறியாமையையும் ஓர்ந்தடக்குவாராக.

இதோடு நில்லாமல் எங்களை "படுவர், இழுவர்" எனக்கூறிபாட்டுப் பாடுகின்றனர். இதிலும் அவரது அறியாமையை வெளியிடுகிறார். படுவரும் சான்றாரும் ஏககுலத்தவரென எந்நூலிலாவது கூறப்பட்டுள்ளதா? திவாகர நிகண்டாவது கூறுகிறதா? அல்லது தர்ஸ்டன் துரையாவது கூறியுள்ளாரா? இல்லையே! இவர்கள் சாதியில் வேட்டைக்கார பள்ளி, குறப் பள்ளி, குடைகட்டிப் பள்ளி, மீன் பள்ளி என (30) முப்பது வகுப்புகளிருப்பதாக தர்ஸ்டன் துரை அவர்கள் கூறியிருப்பதைப்போல், எங்களிலும்

படுவ சாணூர் என்னும் ஒரு வகுப்பும் உண்டெனக் கூறியிருக்கிறாரா? அதுவுங் கிடையாதே! அப்படியிருக்க எங்களுக்கில்லாத படுவர் என்னுஞ் சாதிப்பெயரை எங்கள் தலையில் ஏற்றுவதால் பயனென்னை? எங்களில் சிலர் கள் தொழில் செய்வதால் அவ்விதம் கூறினரெனின், இவர்சாதியார் மனித எருவை தலையில் சுமத்தலால், தோட்டி என்னலாமா? இவர் தோட்டி என ஒப்புவரேல் யாமும் படுவரென ஒப்புதற்குப் பின்னிடையோமென வறிவர்.

'தீண்டாதவரென ஒதுக்கிவைக்கப்பட்டதாம்." இவ்விதம் இவர் கூறுவதைப் பார்த்து இவருக்கு அடுத்த வீட்டுக்காரன் கூத்தால் சிரிப்பான். பறையன் குடித்த குடுவையில் கள்குடிக்கும் இவர் வன்னியகுல க்ஷத்திரியராம். வியாபாரஸ்தானத்தில் திருடும் யாங்கள் தீண்டாதவர்களாம். "குடியாத டாபாவி" என்னும் பாட்டைக்கேட்டும் குடித்து மயங்கி கூறுகிறார்போலும்.

"க்ஷத்திரிய வேஷம்போட்டு ஆடவேண்டுமென்கிறார்." அவ்வித வழக்கம் எங்களுக்கில்லை. சென்னை, இராயபுரத்தில் இராஜவேஷம் போட்டு, 1872-ம் வருடம் செங்கோல் எடுத்த கோவர்துரைமுன் ஆடியது யாரென அறியார் போலும்? இல்லது வாராது என்னும் பிரமாணத்தால் அந்த இராஜவேஷம் போட்ட கவனம் இவருக்கு இப்பொழுது வந்துவிட்டது. 1888-ம் வருஷம் ஆபர்ட்துரைக்கு வரிசை எடுத்து, வன்னிய க்ஷத்திரியர் என வெழுதும்படி பல்லைக்காட்டினார்கள். அவர் உள்ளது உள்ளபடியே எழுதி இவர்களை (On the Original Inhalitanfs of India or Bharatavarsa' என்னும் புத்தகத்தில் பூர்வகுடியில் சேர்த்து மலைக்காசராக்கி விட்டார். 1909-ம் வருஷம் தர்ஸ்டன் துரைக்கும் வரிசை எடுத்து, வன்னிய க்ஷத்திரியரென வெழுதும்படி கேட்டுக் கொண்டார்கள். அவரும் உள்ளதுஉள்ளபடியே எழுதி, தாழ்ந்த சாதியாரெனக் காட்டிவிட்டார். ஆகவே ஆட்டம் ஆடுவது எங்களுக்கு நெடுகிலும் வழக்கமில்லையென வறியவும்.

நாடன் என்பது நாடான் என மருவியதாகக் கூறினேமென்கின்றார். இவர் ஒன்றை இனனென்றுமாற்றி மயங்குவது இவரது சாதி மரபாகும். அப்படிக்கூறினேமில்லை. "அன் ஆன் இறுமொழி யாண்பால் படர்க்கை" என்பது இலக்கணம், அதாவது அன்னும் ஆனும் ஆண்பாலின் விகுதி களாகும். பெரியன் எனக் கூறினும் பெரியான் எனக்கூறினும் இரண்டும் ஒருபொருளையே தருவதைப்போல். நாடன் எனக்கூறினும் நாடான் எனக்கூறினும் இரண்டும் ஒரு பொருளையே தருமென்கின்றோம். இவர் அறியாமைக்கு யாமென் செய்வது. அது அவரது பிறவிக்குணமெனத் தள்ளுவாம்.

"பாண்டியர்களாகவே வைத்துக் கொள்ளுவோம் பாண்டியநாட்டில் ஏன் மரியாதையில்லை என்கின்றார். இவரது அறியாமைக்கு எம்மிடம் அவிடதமில்லை. ஒரு வீட்டை வலத்தில் எடுத்தவன். வீட்டுக்குரியவனை மரியாதைசெய்து அவ்வீட்டிலேயே இருக்கச் செய்ய விரும்புவானோ? அவனது பழைய அக்குபாத்தியதையை கெடுக்க, அவனை வீட்டை விட்டு வெளியேற்றமாட்டானோ? அதைப்போல் ஊரைப்பிடித்தவனும்; ஊருக்குடையவனது பழைய அக்கை யொழித்தல் சகஜமே! அத்தன்மை இவருக்கெவ்விதம் தெரியும். பிடித்தவனுக்கும், விட்டவனுக்குமல்லவோ தெரியும்.

"Those of the invading force who escaped slaughter were carried away into captivity, and being in turn unsuccsfully employed first as cultivators, then as wood cutters and again as grass cutters to the royal elephants, the ultimately elected to be braziers. and braziers they are still." Vide, W. W. Hunter's Imperial Gazetteer of India. Vol. I, P. 358.

"சண்டையில் வெல்லப்பட்டு கொலைக்குத் தப்பித்துக்கொண்ட அரசர்களை சிறையாக்கப்பட்டு, அவர்களை பயிரிடும்படியாகவும், கட்டை வெட்டும்படியாகவும், யானைக்குப் புல்லறுக்கும்படியாகவும் வற்புறுத்தினார்கள். கடைசியாக அவர்கள் கள்ளுத்தொழிலைக் கையாண்டுவந்தார்கள். அவர்கள் இப்பொழுதும் கள்ளுராராக

விருக்கின்றார்கள்" என அண்டர்றுரை அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதைப்போல் யாங்கள் எங்கள் அக்கைவிட்டு, எங்களில் சிலர் கள்தொழில் செய்யலானார்கள். அவர்கள் சன்னார்தொழிலைச் செய்பினும் சன்னாராகாததைப் போல் நாங்கள் கள்தொழில் செய்யினும் கள்விலைஞராகோம். அவர்கள் அவர்களுக்குரிய அக்கை விட்டு நிராதரவாய்நின்றதைப்போல், நாங்களும் எங்களுக்குரிய அக்கைவிட்டு நிராதரவாய் நின்றோம். அதனுண்மையை வேடரெவ்விதமறிவர்.

பத்திராதிபர்.

நாடார் மஹாஜன சங்கம்,
10-வது கான்பரன்ஸ், மதுரை.
(உபசரணைக்கமிட்டியின் அறிக்கை.)

1925ஆ ஜனவரி 8, 9, 10உகளில் நாடார் மஹாஜன சங்கம் 10-வது கான்பரன்ஸ்மதுரையில் நடத்துவதென தீர்மானித்து, அதற்குரிய வேலைகள் தீவிரமாய் நடைபெற்று வருகின்றன. சென்னை கவர்ன்மெண்டின் சட்டமெம்பர் ஹானரபிள் C. P. ராமசாமி அய்யர் C. I. E. அவர்கள் முதல்நாளன்று அக்கிராசனம் வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

சிவ. அ. வாலசுப்பிரமணிய நாடார்,
ஜெனரல் செக்ரட்டரி.

விக்கிரகாராதனம்.
(இலத்தூர்—சுந்தரராஜ சாஸ்திரிகள்)

ஐய!

கடவுளை வழிபட நினைக்கும் ஆஸ்திகர்களுக்கு உபாசனை என்னும் பெரிய வழியிற் கடவுள் விக்கிரகம் என்னும் ஓர் மர முண்டு. அதை அவர் அடைவரேல் அவருக்கு உள்ளமும் உடலும் குளிர வேண்டியபடி நிழலைத் தருவதன்றி இவ்வுலகவாழ்வெனும் பெரு வெப்பத்தை நீக்கி அவரவர் கருதிய பயனையுந் தரும். ஆதலின், ஆரியர்காள்! அந்நன்மரத்தை தேவாலயமென்னும் பாத்தியில் வைத்து அன்பாகிய நீரால் அடிக்கடி குளிரச்செய்து வாருங்கள். அதற்குண்டாகும் பல விடையூறுகளினின்றும் அதைக்காக்க முயலுங்கள். அங்ஙனஞ் செய்யின் அதில் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் நால்வகைக் கனிகள் தோன்றும். அவைகளை நாம் பெற்றுய்யலாம். அவ்வரிய வல்லுலைவ வளர்க்கும்வழி ஆகமங்களுள் விரிவாக விரிக்கின்றன. அவ்விருக்ஷத்தை முற்கூறியவாறு போஷித்தால் அது அவசியம் நல்ல கனிகளைக் கொடுக்கும். அதற்குச் செய்யும் பூஜை நைவேத்தியங்கள் நற்கற்பகத்துக்குச் செய்யும் உரம்போலாம். இவ்வித நன்மரத்தால் எம்முன்னோர் பல நற்பயன்களைப் பெற்றனர். இக்காலத்தும் இவ் வுண்மையறிந்தோர் அங்ஙனம் பெற்றே வருகின்றார்கள். இம்மரத்தையே பாஷண்டர் ஒழிக்க முயல்வது. இதையே அறிவிலிகள் பயனற்ற தென்பர். நிற்க, தற்காலத்து ஆரியருட் பெரும்பான்மையோர் சிறிதுகாலத்துக்குள் எழிற்தொழியும் அற்பசங்கதிகளிற் பணங்களைச் செலவிட்டு நல்வழியிற் செலவிடப் பணவீனராய் ஆகின்றார்கள். பாருங்கள்! தன்னகத்துப் பிறந்த ஒரு பெண் பிறர்வீட்டிற் செல்லவேண்டியதற் குரியதோர் ஸம்ஸ்காரமான கலியாணத்திற் போடும் பந்தல் எவ்வளவு? அதிற்கட்டும் கண்ணாடி விளக்குகளும் மற்றுள்ள வலங்காரங்களும் எவ்வளவு? அவற்றை யமைக்க வேலைக்காரருக்குக் கொடுக்குங் கூலிப்பண மெவ்வளவு? வெகு தூரத்திலிருந்து மேளகாரனை வரவழைக்க வேண்டி எவ்வளவு ரூபாய் செலவிடுகின்றார்கள். இனிச்

சம்பந்திகளுக்குச் செய்யும் சம்பாவனையும் பல்லக்கு முதலியவைகளுக்குள்ள செலவும் மணமகனுக்குக் கொடுக்கும் ஆபரணங்களும் அதிகாரிகட்கு இந்தச்சமயம் செய்யுமுபசாரமும் இச்சமயஞ் சம்பந்தி முதலியோருக்குச் செய்யும் விருந்தும் இராக்கண்விழித்து உடலை வெதுப்பும் வேசியர் கூத்தும் எத்தனை பொருட்செலவால் அமைகின்றன. அவ்வேசி இளம்பருவத்தவளாயின் அவளுக்குக் கொடுக்கும் பொருள் அளவில்லை. அவள் ஏதோ கையை அசைத்துக் காலில் சதங்கை ஒலி கிளம்பி மயக்குமியல்பினளாய் இருக்கவேண்டும். அங்கு பார்க்குஞ் சபையார் பெண்பாலைக் குறிப்பவரேயொழிய தாளம் லயம் ஹஸ்தம் பாவம் ரஸம் இவைமுதலிய விஷயங்களைக் கவனிப்பதேயில்லை; கவனிக்கவுந் தெரியாது. அந்தோ! இவ்விதம் இவர் பணம் பலவழிகளிலும் செலவாய் வரினும் இவர் கனவிலுங் கடவுளை நினைத்து வழிபடுவதில்லை. இவற்றுள் மகா ஆஸ்திகாபினயஞ் செய்பவர் பெரிய சுபகாரியங்களுக்கு முன் கடவுளுக்கு அபிஷேகாதிகள் செய்ய வெகு தாராளமாய் ஒருபடியரிசி, காற்சேர் எண்ணெய், ஒர் தேங்காய், இரண்டு வாழைக்கனி, இரண்டு பாக்கு, இரண்டு வெற்றிலை, உபர்யால் ஒரு அணா சுவர்ணபுஷ்பம் கொடுத்தனுப்புவார். இவர் கலியாணச்செலவு ஆயிரத்துக்கு மேற்படினும் இதற்கிவ்வளவு செய்வதே யரிதிலுமரிது. இவ்வளவு ஊரெல்லா முழங்கக் கலியாணத்தை நடத்தினும் ஒரு மணமகனாவது மாமன் செய்கையால் மகிழ்வதில்லை. சம்பந்திகளுக்கேது செய்யினும் செய்ததாகச் சொல்வதேயில்லை. தாசிகளுக்கு எது கொடுத்தாலும் திருப்தியில்லை பாடகர்க்கோ கொடுப்பதற்களவில்லை; இனி தரித்திர வைதிகர் அரைக்கால் ரூபாய்க்கு வந்தவுடன் மடிமுஞ்சிலாக அவருக்கு அவர் விரும்பிய இச்சிறு தொகை கொடுக்கக் கையிலகப்படுவதில்லை. ஒருசமயம் அவருக்குக் கொடுத்துவிட்டு கணக்குப் பார்க்குங்கால் (ஓகோ வைதிகச்செலவு வெகு அதிகம் பார்த்தீரா! கலியாணம் எல்லாம் சேர்ந்து செலவு ரூபா 2000; இதில் வைதிகளுக்கு மட்டில் மொத்தம் 100 ரூபாய் அதில் வாத்தியாருக்கு 15 ரூபாயாம்! என்ன அநியாயம்! ஏதோ நடந்துபோய்விட்டது. அந்த ஊரிலிருந்து வரவழைத்த தாசி மேளகாரன் பாடகன் இவர்களுக்குத்தான் கொடுத்தது போதாது. அவர்கள் சாமனியரல்ல; வெகு சித்துவான்கள். அவர்களுக் கெவ்வளவோ கொடுக்கலாம் என்பதாகி வம்பளந்து) வெகு வருத்தப் படுகிறார்கள். இனி இவ்வித அபாத்திரங்களிற் கொடுப்பதால் ஏதேனும் பயனுண்டா? ஆரியர்காள்! ஆங்காங்கு கூடியேனும் நீடித்தகாலமாய் நம்மவருள் நிலைபெற்ற இத்துர் வழக்கத்தை அகற்ற முயலுங்கள்; அனேகர் அதிகச் செலவால் ஆண்டிகளானார்கள். இனி மேற்கூறியவரிடம் கொடுக்கும் பணம் அவ்வளவும் மத்தியமாம்சங்களை வாங்கவே உபயோகமாகின்றது. இச்சமயங்களில் எவரேனுமோர் அறிவிற்சிறந்த பண்டிதர் வரின் அவரை லட்சியமே செய்யார். சிலர் அவருக்கு ஏதேனும் நாலணுக்கொடுத்து வெருட்டி உள்ளேவந்து வீண்செலவு செய்தோமென்று வருத்தமுறுவார். அந்தோ! காலத்தின் கொடுமையைக் கண்டீர்களா? ஆரியர்காள்! அதர்மம் நிறைந்து ஆடுமாடுகளைக்கொன்று தின்னவும் ஆனவரையில் மிதமிஞ்சிக் குடிக்கவும் உபயோகமாகும் பணமே உபயோகமான பணமென்றும் கடவுள் தேவாலயத்தில் உபயோகமாகும் பணம் அங்ஙனமல்லாத தென்றும் நினைத் தவலமாகிறார். இவ்விதம் வரையின்றி இவர் செலவழித்த போதிலும் ஒரு சிறுபான்மையுந் தேவாலயங்களுக்காக விநியோகிப்பதில்லை. சில ஊர்களில் தேவாலய சம்பாவனை என்று கலியாணங் களிற் செய்கிறார்கள். அது ஏழைகள் முதல் பணக்காரன் வரையில் ஒரேமாதிரியே. எல்லோரும் கால் என்றால் கால், அரை என்றால் அரையே கொடுத்துவிடுகிறார்கள். மேளம் தாசிகளாயின் ஏழையிடம் ரூபா 10 ஆனால் தனவானிடம் ரூபாய் நூறு பெறுவதற்காக்ஷேபமில்லை.

(இன்னும் வரும்.)